"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2023



"மனிதப் பிறவியும் வேண்டுவதே"

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative
Selected by Parliamentary
Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலசம் KALASAM

மணி 31 ஒலி 107

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE



**கலசம் நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com


# அறத்தின் அடையாளம்

“அற்றார் அழிபசி தீர்த்தல்”, “ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்” என்ற இரண்டும் புனிதமான தொண்டுகள். இன்று இந்த இரண்டு தொண்டுகளும் தேவைப்படாத நாடுகள் எவையுமே இல்லை எனலாம். அந்த அளவுக்கு இயற்கையின் அனர்த்தங்கள், இனப் படுகொலைகள், இரு நாடுகளுக்கு இடையிலான போர்கள் என மக்களைத் தினமும் வாட்டிக்கொண்டே இருக்கின்றன. இந்த மக்களுக்கு ஆறுதல் அளித்து ஆற்றுப்படுத்த பல தொண்டு நிறுவனங்களும் சில நல்லுள்ளம் படைத்தவர்களும் இருக்கிறார்கள் “தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுனர்” இருப்பதனால் இவ்வுலகம் வாழ்கின்றது என்பதை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற புலவர் அன்றே எழுதிவைத்தார்.

‘ஆனந்தவிகடன்’ இதழில் சில காலத்தின்முன் படித்த கட்டுரை ஒன்று நினைவுக்கு வருகிறது. சேவை மனிதர் சுப்பிரமணியம் என்பவர் பற்றி வந்த கட்டுரை அது. “அறத்தின் அடையாளம்” என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. அன்றாடம் உழைத்து உண்ணும் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர் படித்துச் சுயமாகத் தொழில் பார்த்து வளர்ந்தார். 1972 இல் “சாந்தி கியேர்ஸ்” என்ற பொறியியல் நிறுவனத்தை ஆரம்பித்தார். அதில் வந்த வருமானத்தை மக்களின் பசி போக்கவும் பிணி நீக்கவும் கல்வி ஊட்டவும் பயன்படுத்தினார். ஆன்மிகத்தில் பிடிப்புள்ளவர். பாடசாலைகளில் வகுப்பறைகள் கட்ட உதவினார். மலிவாக உணவு பெற உணவகம் நடத்தினார். “சாந்தி சமூக சேவைகள்” அவரமைத்த நிறுவனத்தின் பெயர். இவரின் சேவைகளைப் பார்த்து, பாராட்டவும் பட்டங்கள் வழங்கவும் வந்தவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவார். படம் எடுப்பதைத் தவிர்த்தார். தான் யார் யாருக்கு உதவுகிறேன் என்று வெளிப்படுத்தினால் உதவி பெறுவோரின் சுயமரியாதையை அது பாதிக்கும் என்று கருதினார். அவர் இறந்தபோதுகூட அவரின் குனிந்த தலையுடன் இருந்த ஒரு படந்தான் கிடைத்ததாம். “நான் இறந்துவிட்டால், யாரும் அங்கே நேரில் வரக்கூடாது. வழமையை விட அன்று அதிகமாக வேலை செய்யவேண்டும். அதுவே எனக்குச் செய்யும் மரியாதை” என்று சொல்லியிருந்தாராம்.

இப்போதெல்லாம் சிறு உதவி செய்துவிட்டு பெரிதாக விளம்பரம் போடுகிறார்கள். வேறு சிலர் பெயர் புகழுக்காகத் தொண்டு செய்கிறார்கள். வேறு சிலர் தங்களுக்குப் பணஉதவி செய்தவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவேண்டும் என்று பயனாளிகள் யாரென்பதைப் பகிரங்கப் படுத்து கிறார்கள். இவர்கள் எல்லோரும் சிறிது சிந்திக்கவேண்டும்.

க. ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்


ஓதுவாமூர்த்திகள் 03

நற்செயலான வழிபாட்டின் பயன் - கந்தபுராணச் சிந்தனைகள் 08

ம(றை)றக்கப்பட்ட முருகன் 10

மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் - பயணக் கட்டுரை 13

அறுபது நூல்களைப் பதிப்பித்த ஆறுமுகநாவலர் 17

சுப்பிரமணியக் கடவுள் 20

வாழ்க்கையை வசந்தமாக்கும் நவராத்திரி 27

திருவாரூரில் கணபதியார் 29

திருக்குறட் கதைகள் 31

சைவத்தில் சமத்துவம் 34

பாஞ்சாலி சபதம் 38

Manickavachagar 42

கேள்வி - பதில் 44


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓதுவாமூர்த்திகள்



## முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார்

“திருப்பதிகம் வின்ணப்பம் செய்வார்”
“பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்”
என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருவாக்கில் மலர்ந்த, இறைவனுக்கு இசைத்தொண்டு புரியும், திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் ஓதுவாமூர்த்திகள் பற்றிய பதிவு இது.

ஞானசம்பந்தப்பிள்ளையார் அவதரித்த தலமாகிய தருமையாதீனத்தின் திருக்கோயிலாகிய சீர்காழிப்பதியிலே அருள்நிறை தோணியப்பர் ஆலயத்தில் வெளிப்பட்ட சைவப் பெரும் புதையலில் கிடைத்த பண் குறிக்கப்பட்ட தேவாரச் செப்பேடுகளைச் சைவ உலகமே இன்று மகிழ்ந்து கொண்டாடிவருகிறது.

இந்நிலையில், ஆயிரம் ஆண்டு தொடர்ச்சியாக மரபுவழியாகத் தேவாரப்பதிகங்களைப் பண்ணோடு இசைத்து, பேணிப் பாதுகாத்து, அதன் மூலம் தமிழுக்கும், சைவத்துக்கும், தமிழிசைக்கும் அருந்தொண்டாற்றிவரும் ஓதுவாமூர்த்திகள் பற்றி இவ்வேளையில் சிந்தித்தல் அவசியம்.

ஆலயங்கள் அமைத்து, இறை வழிபாடு என்று தோன்றியதோ, அன்றுமுதல் இன்றுவரை ஆலயங்களில் பண்ணோடு பாடும் முறை தமிழர்கள் வழிபாட்டு முறையில் இன்றியமையாது விளங்குகிறது. வழிபாட்டில் இசையானது இடம்பெற்றுள்ளதைச் சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு காப்பியங்கள், புராணங்கள், பக்தி இலக்கியங்கள் என அனைத்து இலக்கியங்களிலும் காணலாம்.

பக்தி இலக்கியகாலம் என அழைக்கப்படும் பல்லவர் காலத்தில் அருளாளர்கள் தோன்றித் தமிழோடு இசை பாடி, சைவத்தில் தேவாரப்பதிகங்களும், வைணவத்தில் பாசுரங்களும் அருளினார்கள். தேவாரமுதலிகளான ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் பெருமான் ஆகியோர் திருத்தலங்கள் தோறும் சென்று அத்தலங்கள் மீது பதிகங்கள் பாடியருளினார்கள். அன்றுமுதலே தேவாரப்பதிகங்களைத் தலங்களில் வழிபாடுகளில் பாடும் முறை ஏற்பட்டது. இதற்குப் பல்லவ மன்னர்கள் பல நிவந்தங்கள் அளித்துப் போற்றினர். தேவாரம் பாடியவர்களை, “திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்” எனக் குறிப்பிட்டனர்.

பல்லவ மன்னனாகிய நந்திவர்ம பல்லவ மன்னனது 17ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.845) திருவல்லம் திருக்கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில், “திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும் திருப்பதிகம் பாடுவோருக்கும் பலபணி செய்வோர்க்கும் நெல்லு நானூற்றுக்காடியும்” .என்ற கல்வெட்டு மூலம் பல்லவர்காலத்திலேயே கோயில்களில் தேவாரம் ஓதுவதற்கு ஓதுவார்களை நியமித்து நிவந்தம் வழங்கிய முறை இருந்த செய்தியை அறியமுடிகிறது.

முற்சோழர் காலத்தில் திரு எறும்பியூர், பழுவூர், திருவாவடுதுறை, அந்தநல்லூர், வயலூர், ஆத்தூர் முதலிய தலங்களில் உள்ள திருக்கோயில்களில் திருப்பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. முதலாம் இராஜராஜர் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் ஏறத்தாழ தமிழகத்தின் அனைத்துக் கோயில்களிலும் திருப்பதிகங்கள் பாடப்பட்டு வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்காலத்தில் திருப்பதிகம் பாடியவர்கள் "பிடாரர்கள்" என்று அழைக்கப்பட்டனர். தஞ்சைப் பெருங்கோயிலில் நாற்பத்தெட்டுப் பிடாரர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவருமே சிவதீட்சை பெற்று, சிவன் என்று முடியுமாறு பெயர் கொண்டுள்ளனர் . கல்வெட்டில் இவர்களது ஊர்ப்பெயரும், இயற்பெயரும், தீட்சை பெற்ற பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. இவர்களுள், பாலன் திருவாஞ்சியத்தடிகளான இராசராசபிச்சனான சதாசிவன், திருவெண்ணாவல் செம்பொற் சோதியான தக்ஷிணவிடங்கப் பிச்சனான ஞானசிவன், அரையன் அணுக்கன், திருமறைக்காடனான தர்மசிவன் ஆகியோர் தலைமைப்பாடகராக இருந்துள்ளனர். இவர்களுக்குப் பக்கவாத்தியமாக உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிக்க கலைஞர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். சோழர்காலத்தில் பல கல்வெட்டுக்களில் திருமுறை விண்ணப்பம் செய்ய பிடாரர்களை நியமித்த செய்தி நிறைந்து கிடக்கிறது. (அவற்றைத் தனியான ஒரு கட்டுரையில் விரிவாக எழுதுகிறேன்)

திருமுறை பாடிய மண்டபம் "திருமுறை கைக்கோட்டி மண்டபம்" என்று அழைக்கப்பட்டது. திருமுறை ஏடுகளைப் பாதுகாக்க விரகர் என்போர் பணியமர்த்தப்பட்டனர். திருமுறை பாடுவோரை கண்காணித்து தலைமைப்பாடகராக விளங்கியவர் "தேவார நாயகம்" என அழைக்கப்பட்டனர். தாராசுரம் ஐராவதீசுவரர் ஆலயத்தில் திருப்பதிகம் பாடும் நூற்றியெட்டுப் பிடாரர்களின் சிலைகள் அவர்களின் பெயர்களோடு உள்ளன. (இவை பிடாரர்கள் சிலை என்று அறிவித்தவர் குடவாயில் பாலசுப்பிரமணியம் அவர்கள்) குலசேகரப்பட்டினம் சிவன் கோயிலில் நான்கு ஓதுவார்களின் சிலைகளும் அவர்களது பெயர்களும் உள்ளன.

சோழர்காலத்தின் பின்புதான் திருப்பதிகம் பாடுவோரை ஓதுவார் என்றும் ஓதுவாமூர்த்திகள் என்றும் அழைக்கும் முறை ஏற்பட்டது. இவர்களைப் பண்டாரம் என்றும் அழைக்கும் முறை இருந்துள்ளது. நாயக்கர் காலத்திலும் ஓதுவார்களுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டு, ஆலயங்களில் திருமுறை விண்ணப்பம் செய்யப்பட்டன. திருமலைநாயக்கர் காலத்தில் மதுரை ஆலயத்தில் திருமுறைப்பணி செய்வதற்கு அலங்கார ஓதுவார் மரபில் வந்த தாண்டவமூர்த்தி ஓதுவாருக்கு நாயக்க மன்னர் "ஓதுவார் செங்குளம்" என்ற கிராமத்தை நிவந்தமாக சாசனம் செய்து கொடுத்துள்ளார். இன்றும் அந்தப் பரம்பரையில் உள்ளவர்களே மதுரை ஆலயத்தில் பணி செய்து வருகிறார்கள். சமீபத்தில் சிவனடி எய்திய மதுரை குருசாமி தேசிகர் இந்தப் பரம்பரையின் 18 ஆவது தலைமுறையைச் சேர்ந்தவர் ஆவர். இந்தக் குடும்பத்தினரிடம் நாயக்க மன்னர் அளித்த செப்புப்பட்டயம் இன்றும் உள்ளது. இன்றுள்ள ஓதுவார் பரம்பரையில் நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்டது மதுரை குருசாமி தேசிகர் பரம்பரையாகும்.

அடுத்த நீண்ட மரபினைக்கொண்டது திருவாவடுதுறை பொன்னோதுவார் மரபு. திருவாவடுதுறை ஆதீனத்தில் தலைமுறையாகத் திருமுறைப்பணி செய்தவர்கள். இவர்களிடம் தேவார பண்களுக்கிணையான இராகக்குறிப்புகள் அடங்கிய ஓலைச்சுவடிகள் இருந்தன. தமிழிசைச் சங்கத்தின் பண்ணாராய்ச்சி மாநாடுகளில் இவை ஆய்வுசெய்யப்பட்டன. இந்த மரபில் வந்த மாணிக்க ஓதுவார் என்பவரே இந்தியா சுதந்திரம் பெற்றபோது திருவாவடுதுறை ஆதீனம் சார்பாகச் சென்று செங்கோல் அளிக்கப்பட்ட போது "வேயுறு தோளி பங்கன்" என்ற பதிகத்தினைப் பாடியவர் ஆவார்.

திருநெல்வேலி சாலிவடீசுவர ஓதுவார் மரபு, விருத்தாசலம் சாமிநாதமுதலியார் மரபு, திருக்களர் சுப்பையா தேசிகர், அடங்கன் முறை அருணாசல தேசிகர், குலசேகரப்பட்டினம் அப்பாசாமி ஓதுவார், ஆ. ஆ. தண்டபாணி தேசிகர், தருமபுரம் வேலாயுத ஓதுவார், திருக்கடவூர் சாமி ஐயா தேசிகர், திருவாவடுதுறை சோமசுந்தர தேசிகர், தேவூர் சந்திரகாச தேசிகர், பழனி குமாரசுவாமி தேசிகர், இஞ்சிக்குடி சொக்கலிங்க தேசிகர், சீர்காழி திருஞான சம்பந்த ஓதுவார், மதுக்கூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசம் ஓதுவார், மதுரை பொன் முத்தையா ஓதுவார் ஆகிய ஓதுவாமூர்த்திகள் கடந்த நூற்றாண்டுவரை மரபுவழியாகத் திருமுறை ஓதும் பணி செய்தவர்கள். இன்றும் இவர்கள் வழிவந்த மரபினரே திருமுறைப்பணி செய்துவருகிறார்கள்.

தற்காலம் முதுபெரும் ஓதுவா மூர்த்திகளாக திகழ்பவர்கள்:-

| | |
|---|---|
| திருப்பனந்தாள் முத்துக்கந்த ஓதுவார் | சிதம்பரம் ஞானப்பிரகாச ஓதுவார் |
| வயலூர் திருஞானசம்பந்த ஓதுவார் | திருத்தணி சுவாமிநாத ஓதுவார் |
| பழனி சண்முகசுந்தர ஓதுவார் | திருப்பரங்குன்றம் திருஞானசம்பந்த ஓதுவார், |
| சுப்பிரமணிய ஓதுவார் | லண்டன் சுவாமி தண்டபாணி ஓதுவார் |
| சிங்கப்பூர் வைத்தியநாத ஓதுவார். | |

இவர்களின் மரபு வழி வந்த ஓதுவார்களே தற்காலம் பணியில் இருப்பவர்கள்.

| | |
|---|---|
| பழனி வெங்கடேச ஓதுவார் | கரூர் சுவாமிநாதன் ஓதுவார் |
| மயிலை சத்குருநாதன் ஓதுவார், | வயலூர் முனைவர் திருஞான பாலச்சந்தர் ஓதுவார் |
| மதுரை பொன்.முத்துக்குமரன் ஓதுவார் | மயிலாடுதுறை சோ.சிவகுமார் ஓதுவார் |
| கரிவலம்வந்தநல்லூர் திருமுருக.சுந்தர் ஓதுவார் | சிவகாசி ரமேஸ் ஓதுவார் |

ஆகியோருடன் இன்னும் பல இளம் ஓதுவார்களும் தற்காலம் திருமுறை ஓதும் பணியில் இருக்கும் ஓதுவாமூர்த்திகள் ஆவர்.

ஓதுவாமூர்த்திகளின் பெருமைகள்:

- சங்ககாலம் முதல் பாணர், பாடினி, விறலியர், பொருநர், கிணையர், கோடியர், வயிரியர், கூத்தர், மாகதர்கள் போன்ற பல்வேறு தமிழ் இசைக்கலைஞர்கள் வாழ்ந்த தமிழகத்தில் எஞ்சி இருப்பவர் சோழர் காலத்தில் பிடாரர் என்று அழைக்கப்பட்ட ஓதுவார்கள்தான் தற்காலம் எஞ்சியிருக்கும் தமிழிசைக்கலைஞர்கள்.
- ஆயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட ஒரு மரபுத்தொடர்ச்சியாக பண்ணிசைப்பணி செய்யும் மரபு உலகில் வேறு எந்த இனத்திலும் கிடையாது.
- தொன்மையான தமிழிசை மரபினை இன்றுவரை அதன் இயல்பு மாறாது காத்து வருபர்கள் ஓதுவார்கள்.
- அண்ணாமலைச் செட்டியாரின் தமிழிசை இயக்கத்தின் பண்ணாராய்ச்சி மாநாடுகளில் பழம் பண்களுக்கான தற்கால இராகங்களின் பெயர்களை கண்டுபிடிக்கும் பணியில் ஓதுவார்கள் மிக முக்கியபாகம் வகித்தனர். இன்றுவரை இப்பணி தொடர்கிறது.
- 13ஆம் நூற்றாண்டில் கர்நாடக சங்கீதம் தோற்றம் பெற்று தமிழக இசை மரபு பல மாற்றங்கள் பெற்றாலும் சங்ககாலப் பண்ணிசை மரபை இன்றுவரை அதன் இயல்பு மாறாது தேவாரப்பாடல்கள் மூலம் காத்து வருபவர்கள் ஓதுவார்கள்.
- தமிழிலேயே மட்டும் பாடும் தொன்மையான உண்மையான தமிழிசைக்கலைஞர்கள்.
- வேதம் ஆகமம் குருகுலமாக பயில்வதைப் போன்றே, தேவாரப் பாடசாலைகளில் ஓதுவார்கள் சிறுவயதில் தாய் தந்தையரை, குடும்பத்தினரைப் பிரிந்து குருகுலமாகத் தேவாரம் பயில்கிறார்கள்.
- தமிழுக்கும், சைவத்துக்கும், தமிழிசைக்கும் ஒருசேரப் பணியாற்றுபவர்கள்
- குறிப்பட்ட சமூக வேறுபாடு இன்றி அனைத்து சமூகத்தினரும் ஓதுவாராக விளங்கியுள்ளனர்.
- தமிழகத்தில் அந்நிய படையெடுப்புக் காலத்தில் ஆலயங்களில் பூசைகள் நடை பெறாமல் விக்கிரகங்களை, தேவாரச் செப்பேடுகளை, மக்கள் மண்ணில் புதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தபோது, தேவாரப் பதிகங்களை பனையோலைகளில் எழுதிப் பாதுகாத்தவர்கள் இந்த ஓதுவாமூர்த்திகள், அவற்றை விற்று அதில் வந்த சொற்ப வருமானத்தில் தம் வாழ்வாதாரத்தினை எதிர்கொண்ட போதும் வேறு தொழிலுக்குச் செல்லாதவர்கள்.

• இதே காலகட்டத்தில் மக்கள் மத்தியில் அந்திமக்கிரியைகளின் போது மட்டுமே திருமுறைகள் பாடப்பட்டுவந்தன. அந்நிலையைப் பிற்கால ஓதுவார்கள் மாற்றி மங்கல நிகழ்வுகளிலும் பாடத்துவங்கினர். இந்த மாற்றத்துக்காக மிகுந்த சிரமங்களையும் பொறுத்து வந்துள்ளனர்.

• இசைத்திறன் இருந்தும் பணத்துக்காகவோ, பரிசில்களுக்காகவோ பிறமொழிப் பாடல்களையோ, சினிமாப்பாடல்களையோ எங்கும் பாடாதவர்கள்.

• மக்கள் துயர் தீர்ப்பதற்கும் திருமுறைகளை விண்ணப்பம் செய்தவர்கள்.

• கொடிய நோய் தீரவும், மழைவேண்டியும், நாட்டு நலன் கருதிப்பாடி, பலனும் கண்டுள்ளனர் .(இன்றும் மழை வேண்டி ஓதுவார்கள் திருமுறை விண்ணப்பம் செய்தால் மழை பெய்யும் அதிசயத்தை காணலாம்)

• தமிழகத்தில் ஏற்பட்ட நாத்திகத் தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட போதும், தமது மரபைக் கைவிடாது போற்றியவர்கள் ஓதுவா மூர்த்திகள்.

இன்றைய நிலை:

• சைவ உலகம் ஓதுவார்களை ஆதரித்து வந்தபோதும், இந்த பண்ணிசை மரபினர் இன்றுவரை தமது மரபினைக் காக்க பல்வேறு இடர்களை சகித்துக்கொண்டுதான் வாழ்கின்றனர்.

• நகரத்தார்களும், ஆதீனங்களும், அடியார் பெருமக்களும் ஓதுவார்களைப் போற்றிவருகின்றனர்.

• ஒருகாலத்தில், தமிழகக் கோயில் முழுதும் தேவாரம் ஓதும் அரசுப் பணியாளர்களாக அதிக சம்பளத்துடன் பணியாற்றி விளங்கியவர்கள். இன்று சில முக்கிய கோயில்களில் மட்டும் குறைந்த ஊதியத்தில் பணியாற்றுகின்றனர்.

• தமிழிசையில் இருந்து தோன்றிய கர்நாடக சங்கீதத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் பண்ணிசைக்கு வழங்கப்படுவதில்லை.

• ஓதுவார்கள் இசைக்கலைஞர்களாகப் பார்க்கப்படாமல் ஆன்மிகப்பணியாளர்களாகவே பார்க்கப்படுகின்றனர்.

• கர்நாடக சங்கீதத்திற்குத் தாய் இசையாக விளங்குவது தேவார இசை. ஆனால் கர்நாடக சங்கீத சபாக்களில் பஜனை சம்பிரதாயத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவம் கூட ஓதுவாமூர்த்திகளுக்குத் தேவாரம் இசைக்க வழங்கப்படுவதில்லை. சில நேரங்களில் மிக அபூர்வமாகவே இது நடைபெறுகிறது.

• சங்கீத நாடக அக்கடமியின் டி.டி.கே விருதினை திருப்பனந்தாள் முத்துக்கந்த ஓதுவார்மட்டுமே பெற்றநிலையில் பல வருடங்கள் கழித்து இந்த வருடம் மயிலை சத்குருநாதன் ஓதுவாருக்கு வழங்கப்படவுள்ளது.

• தேவார இசை அரங்குகள் தனியாகவே நடைபெறுகின்றன.

• சைவ ஆதீனங்கள், தமிழிசைச்சங்கம், பல சைவ அமைப்புகள் மூலமே ஓதுவார்கள் விருதுகள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுகின்றனர்.

• தமிழக அரசின் இசைக்கலைஞர்களுக்கான விருதுகளில் "கலைமாமணி" விருது ஓதுவார்களுக்கு அபூர்வமாகவே வழங்கப்படுகிறது.

• உலகம் தோறும் நடைபெறும் தமிழிசை மாநாடுகளில் மரபு வழி வந்த ஓதுவார்களுக்கு அழைப்பும் இல்லை; எந்த விருதுகளும் வழங்கப்படுவதுமில்லை.

• மத்திய அரசின் கலைஞர்களுக்கான உயர்விருதுகளான "பத்ம"விருதுகள் இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் வருட பாரம்பரியம் கொண்ட ஓதுவார்கள் ஒருவருக்கும் வழங்கப்படவில்லை என்பது வேதனையான விடயம், மத்திய அரசுக்குத் தமிழகத்திலிருந்து எடுத்துச் சொல்வார் யாரும் இல்லை.

• அகில இந்திய வானொலியில் தேவார இசைக்கலைஞர்களுக்கு, கர்நாடக இசைக்கு நிகரான நிலை வழங்கப்படவில்லை. மெல்லிசைப்பாடல் பிரிவிலேயே ஓதுவார்களுக்கு 'கிரேட்' (Grade) வழங்கப்படுகிறது.

• அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், அரசு இசைப்பள்ளிகளிலும் மட்டுமே தேவார பட்டயப் படிப்பு உள்ளது .

• தேவாரத்தில் உயர்கல்வி இதுவரை தமிழகத்தில் இல்லை

• தேவார இசையின் பெருமையை உணர்ந்து போற்றும் இலங்கை மண்ணில் தேவாரத்துக்காக உயர்கல்வி உள்ளது. நாவலர் பெருமான் வழி நிற்கும் மக்கள் பல வழிகளிலே தேவார இசையை போற்றி வருகின்றனர் உலகிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே தேவாரத்திற்கு இளங்கலைப்பட்டப் படிப்பு உள்ளது.

• இலங்கை இந்துகலாசார அமைச்சு நாடுமுழுவதிலும் ஓதுவார் மரபுவழி பண்ணிசைப் பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

• இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா நாடுகளில் வாழும் தமிழர்கள் ஓதுவார்களின் பெருமை உணர்ந்து அவர்களைப் போற்றிவருகின்றனர்.

• இன்று ஓதுவார்கள் பல இடர்கள் மத்தியிலும் உள் நாட்டிலும், வெளிநாடுகளுக்குச் சென்றும் பல அரங்குகளிலும், இணையங்களிலும் தேவார இசையை ஏற்றுப்போற்றிவருகிறார்கள்

• மரபு வழி வந்த ஓதுவாமூர்த்திகளின் வரலாறை ஆராய்ந்து “ஓதுவா மூர்த்திகள் வளர்த்த பண்ணிசை மரபு” என்னும் தலைப்பில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் தி. பாலச்சந்திர ஓதுவார் “முனைவர்” பட்டம் பெற்றுள்ளார்.

• மரபுவழி தமிழிசையைப் போற்றவேண்டுமாகில் பண்ணோடு இசை பாடிவரும் ஓதுவாமூர்த்திகளை தமிழர்களும், அரசும், குறிப்பாக இசைக்கலைஞர்களும் இவர்களை ஆதரித்தல் அவசியம். இல்லாவிடின் தொன்மையான தமிழிசை மரபு அழிவுக்குச் சென்றுவிடும்

• இன்று பலர் தேவாரங்களைப் பாடி வந்தாலும் மரபுவழி வந்த, தேவாரப் பாடசாலைகளில் பயின்ற ஓதுவார்களின் இசைத்திறண் பழமையானது, தனித்துவமானது.

இன்று உலகில் உள்ள இசை வடிவங்களில் தொன்மையான இசைவடிவம் தேவாரங்கள். முதல் பதிகம் பாடியவர் காரைக்கால் அம்மையார். மூத்த இசையமைப்பாளர் வள்ளியம்மையார். நீண்ட பாரம்பரியம் கொண்ட இசைக்கலைஞர்கள் ஓதுவாமூர்த்திகள். என்ற கருத்தினை தமிழர்கள் யாரும் மறவாது இருப்போம்.

ஓதுவாமூர்த்திகளின் பெருமையுணர்ந்து அவர்கள் வழி நின்று தமிழிசை காப்போம். இக்கட்டுரையில் உள்ள ஓதுவாமூர்த்திகளின் விவரங்கள் முனைவர் பாலச்சந்திர ஓதுவார் அவர்களின் ஆய்வேட்டிலிருந்து தொகுக்கப்பட்டது. அவர்களது ஆய்வேட்டில் 200 உக்கு மேற்பட்ட ஓதுவார்கள் பற்றிய விரிவான ஆய்வுச்செய்திகள் உள்ளன. இக்கட்டுரையின் விரிவு கருதி முக்கியமான ஓதுவார்கள் பற்றியே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

**தகவல்: திரு குமரேசன் (இலண்டன் திருமுறைக் கழகம்)**

(From Whats App)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செயலான வழிபாட்டின் பயன்

## கந்தபுராணச் சிந்தனைகள்

Dr க சிவலோகநாதன்

"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடினார். சிவபெருமானுடைய கோயில்களின் சிறப்பைச் சொல்பவர்கள் அதைத் தல விசேடம், மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம் என்று மூன்று வகையாக வகுப்பார்கள். இதனாலேயே நல்லோர் வாழுகின்ற, ஆலயங்கள் நிறைந்த ஊர்களிலே குடியிருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். இதையே, கந்தபுராணத்திலே கைலாயத்திலிருந்த முசு என்ற இனத்தைச் சேர்ந்த குரங்கொன்று தற்செயலாக வில்வம் இலைகளைச் சிவபெருமான் மீதும் பார்வதி மீதும் அர்ச்சித்ததன் பயனாய், பெரிய முசுகுந்தச் சக்கரவர்த்தியாக வந்ததாகச் சரித்திரம் விளக்குகிறது. அம்முசு கைலாச மலையில் இருந்ததினாலேயே அதனால் அர்ச்சனையைச் செய்ய முடிந்தது.

முன்னொரு காலத்திலே கைலாசமலையிலே உள்ள சோலையில் சிவபெருமானும் உமா தேவியாரும் எல்லையில்லா மகிழ்வோடு வீற்றிருந்தார்கள். அப்பொழுது முசு என்ற ஒருவகைக் குரங்கின் கூட்டங்கள் அங்கிருந்த வில்வமரக்கிளையிலே இருந்தன. அவற்றுள்ளே இருந்த ஆண் குரங்கொன்று எல்லாவற்றையும் உணர்ந்த முனிவர்களைப்போல சிவபெருமான் மீதும் உமா தேவியார் மீதும் அளவில்லாத வில்வ மரத்து இலைகளைப் பறித்துத் தூர்த்தது. இதை உணர்ந்த உமாதேவியார் சற்றுச் சினங்கொண்டர். அச்செயலைச் சிவபெருமான் கண்டு நம்மை அர்ச்சனை செய்த அக்குரங்கின் மேல் சினம் கொள்வது ஏன்? இனி அதை விடுப்பாயாக என உரைத்தார். இதனைக் கேட்ட உமாதேவியார் சினந்தணிந்து அந்த முசுவிற்கு அருள் புரிந்தார். அப்போது ஞானமே வடிவான சிவபெருமான் அந்த முசுக்கலையின் மனதில் கிடந்த அஞ்ஞானத்தைப் போக்கி நல்லுணர்வைக் கொடுத்தருளினார். நல்லுணர்வைப் பெற்ற முசுக்கலை அச்சத்துடன் அந்தப் பெரிய வில்லமரத்தினின்று இறங்கிவந்து அப்பனும் அம்மையுமாகிய சிவபெருமானையும் உமையம்மையாரையும் பக்தியுடன் வணங்கிப் "பொய்யடியேனான என்னை மன்னித்தருளுக" என வேண்டிற்று. இவ்வாறு சிவபெருமானையும் உமையம்மையாரையும் காணக்கூடியவாறு பெருமை பொருந்திய கைலாயமலையிலே பிறந்து வாழ்ந்த அந்த முசுக்கலை வேண்டுதலும் சிவபெருமான் "நீ செய்தது தவறு என்று அச்சத்துடன் பேச வேண்டியதில்லை. நீ இவ்விடத்தில் எங்களை உயர்ந்த மென்மையான வில்வ இலைகளை இட்டு அர்ச்சித்துப் பூசை செய்தாய். ஆதலின் மனு வம்சத்தில் பிறந்து உலகம் முழுவதும் ஆள்வாயாக" என்றார்.

பிழையிதென அச்சமொடு பேசல் எமை ஈண்டே
விழுமியதோர் கூவிளையின் மெல்இலைகள் இட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குலம் உதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தான்

தெய்வயானையம்மை திருமணப் படலம் 37

சிவபெருமானின் அந்த வாசகங்களைக் கேட்ட முசுக்கலை அளவற்ற துன்பம் கொண்டதாய் விம்மி விம்மி நடுங்கிச் சிவபெருமானைப் பார்த்து பின்வருமாறு சொல்லிற்று: "நாள்தோறும் உங்களைத் தரிசித்து மகிழ்ச்சியுடன் இவ்விடத்தில் வாழ்வதை விடுத்துப் பூமியில் மங்குகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியும் செல்வமான வலையில் அகப்பட்டுக் கொள்வேனானால் எவ்வாறு உய்வேன்?". இதைக்கேட்ட சிவபெருமான், "முசுக்கலையே உனது உள்ளம் நல்லது. நீ பூமியில் சென்றிருந்து பின்னர் இங்கு வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். இதைக்கேட்ட முசுக்கலை தான் தன்னுடைய முசுவின் முகத்தோடுதான் மானுடனாகப் பிறக்க வேண்டுமென வரம் பெற்றுக்கொண்டு பூமிக்கு வந்தது.

சிவபெருமானின் அருளின் சிறப்பினால் மிக்க துன்பமடைந்தும் செல்வம் இழந்தும் அரசை இழந்தும் வாய்மையை நிலைநாட்டி உலகை ஆண்ட அரிச்சந்திரனின் ஒப்பில்லாத வழித்தோன்றலாய் அம்முசுக்கலை பிறந்தது.

ஆரஞர் மூழ்கியும் ஆக்கம் இழந்தும்
வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித்
தாரணியாள் அரிச் சந்திரன் என்போன்
ஓர்மரு மான்என வேயுதித் தன்றே.

-தெய்வயானையம்மை திருமணப் படலம் 43

இவ்வாறு பிறந்த முசுக்கலை முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற பெயரோடு வலிமைமிக்க அரசனாக விளங்கித் தேவர்களுக்கும் உதவி செய்து சிறந்த சைவச் சீலனாக வாழ்ந்து மீண்டும் கைலையைச் சேர்ந்தது. இதன் மூலம் முசுக்கலைக்குத் தற்செயலாகவேனும் இறைவனுக்கும் இறைவிக்கும் அர்ச்சிக்க சந்தர்ப்பம் கொடுத்தது மகிழ்ச்சிமிக்க கைலை வாழ்வவே என்பதும், இதனால் சிவத்தன்மை பொருந்திய இடங்களில் - ஆலயங்களைச் சார்ந்த இடங்களில் வாழ்வதனால் பெரும் பயன் விளையுமெனக் கந்தபுராணம் காட்டும் சைவத்தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கின்றது.

## திருமுருகாற்றுப்படையை ஓதுவதின் பயன்

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்

நக்கீரர் திருவாய் மலர்ந்தருளிய நல்ல திருமுருகாற்றுப்படையைத் தன்னைப் பாதுகாக்கும்பொருட்டு தினந்தோறும் ஒருவன் பாராயணம் செய்தால் பெருமையை உடைய முருகப்பெருமான் அவன் முன் பாதுகாக்க வந்து எழுந்தருளி வந்து உள்ளத் துயரைப் போக்கி அருளி அவன் கருதிய எல்லாவற்றையும் வழங்கியருள்வான்.

நன்றி: பண்டிதர் வே சங்கரப்பிள்ளை
திருமுருகாற்றுப்படை மூலமும் வசனமும்
(1972)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ம(ை)றக்கப்பட்ட முருகன்



ஒரு பிரசித்தமான முருகன் கோயில் - எங்கே என்கிறீர்களா? தமிழ் நாட்டில் மனதை மயக்கும் மலைகள் மலிந்து காணும் "கொடைக்கானலில்" மலை உச்சியில் கம்பீரமாகக் காட்சி தரும் குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில். பாரததேச தமிழ் நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் பேருந்து நிலையத்துக்கு 4 கி.மீ. தொலைவிலேயே கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவர் சீர்மிகு சுப்ரமண்ய ஸ்வாமி.

**இலண்டன் அம்பி**



இற்றைக்கு ஏறத்தாழப் பத்து வருடங்களுக்கு முன்னர் சிறு சுற்றுலா சென்றிருந்தபோது தற்செயலாக இக்கோயிலுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு அடியேன் கண்டு பெரும் வியப்புற்ற கல்வெட்டு "இக்கோயில் லீலாவதி இராமநாதன் அம்மையாரால் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நினைவாக நிறுவப்பட்டது" என அறிவித்தது. இந்த அதிசயிக்கத்தகும் செய்தியே அடியேனை மேலும் மேலும் இக்கோயில் பற்றி அறியும் அவாவைத் தூண்டியது. (also ref. Kodaitrip.com).

அண்மையில் இக்கோயிலைத் தரிசிக்கும் அரும்பெரும் வாய்ப்புக் கிட்டியது முருகன் கருணையே. தமிழ் ஈழம் பெற்றெடுத்த தவப்புதல்வன் சேர் பொன்னம்பலம் இராமநாதனை அறியாதார் அறியாதாரே!

அடியேன் கல்விபயின்ற பரமேஸ்வராக் கல்லூரி (இன்றைய பெருமைதரு யாழ். பல்கலைக் கழகம்) இராமநாதன் கல்லூரி ஆகியவற்றைத் தோற்றுவித்தது மட்டுமன்றி ஈழத்துக்கே பெருமை தேடித்தந்த - பல்லின மக்களாலும் - ஏன், அன்றைய பிரித்தானிய வல்லரசாற்கூட - போற்றப்பட்ட சைவப் பெருமகனாரின் துணைவியாரே அன்னை லீலாவதி.

அவர் தனது பிறப்பு மதமாகிய கிறிஸ்துவத்தை விட்டு, சைவசமயதத்தைத் தழுவினார். அவர்தம் பக்தி மேலீட்டினால் இந்திய நன்னிலமான கொடைக் (கோடை) கானலில் - முருகனுக்குப் பிரியமான அதி உயர்ந்த பீடமான குறிஞ்சி மலைப் பகுதியில் கோயில் கட்டுவித்தார்.

முருகன் வள்ளியை வஞ்சித்ததும் இம்மலையிலேயே என்றும் கூறுவர்.

அன்னை லீலாவதியை ஐரோப்பியப் பெண் என்றும் (Travetriangle.com – "Europian lady woman" ) ஒருசிலர் ஆஸ்திரேலியப் பெண்மணி என்றும் குறிப்பிடுவர். அதோடு மட்டுமன்றி இராமநாதனைக்கூடக் (ஒரு மின் வலையம்) கோயில் இருக்கும் இடத்தைச் சேர்ந்தவர் என்று புதியதொரு செய்தியை வழங்குகிறது.

இங்கு குறிப்பிட்ட மின் வலையங்களை திறந்து பார்ப்பின் இவ்வுண்மைகளை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். மாலைமலர் மின்வலையம் : https://www.maalaimalar.com/




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இப் பகுதி இக்கோயில் பற்றிக் குறிப்பிடும்போது -12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் இந்த அரிய வகை குறிஞ்சி மலர்கள் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் நீல வண்ணத்தில் பூத்துக் குலுங்கும் அழகை ரசித்த ஆஸ்திரேலியப் பெண்மணி ஆர்.எல்.ஹாரிசன் என்பவர், இப்பகுதியைச் சேர்ந்த இராமநாதன் என்பவரைத் திருமணம் செய்தார் - என்று குறிப்பிடுகிறது. "இந்தக் கோயில் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்" எனக் குறிப்பிட்ட இந்தக் கட்டுரையில் இதைவிட வேறு வரலாற்றுப் பதிவே இல்லை. ஈழம் தந்த மஹான் இராமநாதப் பெருந்தகை "இப்பகுதியைச் சேர்ந்தவர்" என்பது எவ்வாறு பொருந்தும்?




சென்ற பெப்பிரவரி மாதம் (2023) அந்த முருகனைத் தரிசிக்கச் சென்றவிடத்து, அங்கு பூஜை செய்துகொண்டிருந்த 35-40 வயது மதிக்கதக்க பூசாரியாரிடம் இந்த ஆலயத்தை நிர்மாணித்தவர் பற்றி ஏதாவது எழுத்துச் சுவடிகள் உள்ளதா என வினாவியபோது, அவர் தந்த விடை சுரீர் என அடியேன் மனதைத் துளைத்தது. "இங்கு எழுத்து வடிவில் ஏதும் இல்லை, - லீலாவதியின் படம் அலுவலகத்தில் மாட்டப்பட்டுள்ளது - அது மட்டுமே" என்றார். உடனே அவ்விடம் சென்று, ஒரு வலை யன்னலின் உள்ளே மங்கிய படத்தைக் கண்டபோது கண்கள் கலங்கின. "ஈழம் பெற்றெடுத்த கல்விமான்; உள்நாட்டு வெளிநாட்டுத் தலைவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு; ஓர் உயர் பதவி வகித்த சட்ட மா அதிபர்; சமூக சேவகர்; சைவப் பெருந்தகை; யாழ்ப்பாணத்தில் உயர் கல்விக்கும் அதி உகந்த மாபெரும் பாடசாலைகளைத் தோற்றுவித்தவர். அவரது நினைவாக அவரது மனைவி - தம்மைக் கவர்ந்து தழுவிய இந்து மதத்தின் சின்னமாக நிர்மாணித்த கோயிலின் ஸ்தாபகருக்கா இந்த நிலை?" என அடியேனது மனம் மிக்க ஏமாற்றமடைந்தது.



என்ன! கோயிலைச் சுற்றி வரும்பொழுது கண்டவை சற்றே மன ஆறுதல் கொடுத்தன - மூலவர் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுகளும் - பின்னர் கோயில் முகப்புக்கு அண்மையில் அக்கல்வெட்டுகளின் புரியக்கூடிய தமிழாக்கத்தையும் கண்டு பேருவகை அடைந்தேன். கல்வெட்டுகள் பெரிதும் புரிய இய லாதவை. அவற்றை அனைவரும் புரியக்கூடிய தமிழில் ஒரு கற்பலகையில் வடித்திருப்பது பலரின் கண்களைக் கவராம லிருக்கலாம். ஏனெனில், அவற்றிற்கு மேலாக, அண்மையில் புனர் நிர்மாணம் செய்தோர், அரசியலாளர் அவர்களின் பெயர்ப் பலகைகள் பளிச்சென்று தெரிந்தன.

அடியார்களை அண்மிக்கும் முருகனுக்கு மாற்று விளம்பரங்கள் தேவையில்லைப் போலும்!
இவ் விடயம் பற்றி, மின் வலையங்களை வலம் வருங்கால், சுற்றுலா ஒழுங்குனர்க்கோ தமிழ் நாட்டு சுற்றுலாத்துறையினருக்கோ இந்த அரியதொரு பொக்கிஷத்தை மக்களுக்கு உரியவாறு அறியத்தரும் அக்கறையே இல்லை என்பதை அறிய மனம் புழுவாய்த் துடிக்கிறது.

தமிழ்நாட்டு சுற்றுலாத்துறையின் மின்வலையத்தில், ஆங்கிலத்திலோ, தமிழிலோ, இராமநாதன் என்றொருவரின் மனைவியால் கட்டப்பட்டது என்றதை விட வேறேதும் இல்லையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதன் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தொன்றுதொட்டு விளங்கும் தொண்டுச் சின்னமான பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ்வருடத்தில் அவர் மனைவியாரால் அன்னாரது நினைவுச் சின்னமாக நிர்மாணிக்கப்பட்ட கொடைக்கானல் திருமுருகன் ஆலயத்துக்கும் உரிய மதிப்பு கொடுத்தல் அவசியம். உரிய அதிகாரிகளோ அரசினர்களோ அல்லது ஆட்சியாளரோ இந்தப் புனித இடத்துக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பாரா? அவ்வாறு கொடுத்தல் அதிமிக அவசியம் எனக் கருதுகிறேன் - விடை கிட்டுமா என்ற ஆதங்கத்துடன் விடை பெறுகிறேன்.








# கொடிமரம்



திருவிழாக் காலத்திலே கோயிலுக்குப் போனால் கொடிமரத்திலே ஒரு சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். சீலையிலே ஒரு பசு எழுதப்பட்டிருக்கிறது. அந்தச் சீலையோடு ஒரு தர்ப்பைக் கயிறு சேர்ந்திருக்கிறது. கொடிமரம் சிவமென்றும் பசு எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும் தர்ப்பைக் கயிறு பாசம் என்றும் சிவாகமம் சொல்கிறது.

> "பதி: ஸ்தம்பஇதி ப்ரோக்த : பசு: ககஇதிஸ்ம்ருத
> ரஜ்சு: பா ச இதிப்ரோக்த : த்ரிவிதாஸ்தேஸ்யமந்திச" - அசித ஆகமம்

கடவுளிலே ஆன்மா தங்கியிருப்பதுபோலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடி மரமும் சீலையுமென்று இரண்டு பொருள்கள் இருந்தாலும், அதைப் பார்க்கிறவர்கள் கொடிமரமென்று ஒரே பொருளாக மதிக்கிறார்கள். சிவமும் ஆன்மாவும் அத்துவிதமென்பதை இது விளக்குகின்றது. கயிறு சீலையைச் சுற்றியிருப்பதுபோல பாசம் ஆன்மாவைச் சுற்றிக்கொண்டு இருக்கிறது. முப்பொருட் சம்பந்தத்தைக் கொடிமரத்திலே காணலாம்.

நன்றி: சைவபோதம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீனாட்சி சுந்தரேஸ்வரர்

## பயணக் கட்டுரை

உலக அதிசயங்கள் போன்று கருதப்பட்ட தலம் இது. சிதம்பரம், காசி, காளத்தி போன்ற திருக்கோயில்கள் வரிசையிலும் இது உளது. புராண காலத்தில் ஆலவாய் எனக் குறிப்பிடப்பட்ட ஆலயம்.



ஆலவாய்: (மதுரை)

சிவபெருமானின் அணியான அரவம் தன் வாலை வாயினாற் கவ்வி இந்த நகரத்தின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற நாமம் பெற்றது. பூலோக கைலாயம், கடம்பவனம், கூடல் ஆகிய பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறது.

இறைவன் : சோமசுந்தரர், சொக்கநாதர்.
இறைவி: மீனாட்சி, அங்கயற்கண்ணி, மரகதவல்லி, தடாதகைப்பிராட்டி, சுந்தரவல்லி, அபிடேகவல்லி, மும்முலைத் திருவழகி.
தலமரம்: கடம்பு
தீர்த்தம் : பொற்றாமரைக்குளம்

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், குமரகுருபரர் ஆகியோர் பாடிய தலம். 2000 ஆண்டுகளுக்கு முன்பே உள்ள ஆலயம். 14 ஏக்கர் நிலத்தில், 14 திராவிட முறையில் அமைந்த 33000 சிற்பங்கள் உடைய கோபுரங்கள் கொண்ட பிரமாண்டமான தலம்.

தெற்குக் கோபுரம் 170 அடி உயர்வானது. இறைவன் இறைவியின் கோபுரங்கள் தங்கத்தால் ஆனவை.

கோபுரம் = கோ+ புரம்; கோ = அரசன், புரம் = இடம்.
அநேகமான ஆலயங்கள் நான்கு வாசல்கள் கொண்டவை. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் ஐந்து வாசல்கள் உளது என்பது குறிப்பிடத்தக்கது. மதுரை வைகை ஆற்றின் தென்கரையில், நடுநாயகமாக விளங்கும் பாண்டிநாட்டில் உள்ளதலம்.
வரலாறு:

மலையத்துவச பாண்டியன், மனைவி காஞ்சனமாலை புத்திர பாக்கியம் இல்லாததால் புத்திரகாமேட்டி யாகம் செய்தனர். அச்சமயம் வேள்விக் குண்டத்திலிருந்து, பார்வதி, மூன்று தனங்களோடு குழந்தையாகத் தோன்றினாள். மணப்பருவத்தில் அரசியாகியவர், படைகளோடு பல இடங்களை வென்றெடுத்தார். இறுதியாகக் கைலைமலையை அடைந்து சிவபெருமானைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் மூன்றாவது தனம் மறைந்தது. பின்னர் பங்குனி உத்தர நன்னாளில் சிவனை மணந்தார்.

மீனாட்சி அம்பாள் சந்நிதி:
மீன் + அட்சி = மீனாட்சி. மீன் போன்ற கண்களுடைய அம்பாள். அக்ஷி = கண்ணை உடையவள்.

கருவறை :
32 சிங்க சிற்பங்கள், 64 சிவகணங்கள், 8 கல்யானைகள் கொண்டது. நின்ற நிலையில், இடை நெளித்து, வலது கரத்தை மடித்து, தாமரை மலர், அதன் மேல் கிளி வீற்றிருக்க அருள்பாலிக்கிறாள். மரகதச் சிலையாகியதால் மரகதவல்லி என்ற பெயராகும். மீன்கள் இமைக்காது எப்போதும் பார்ப்பதுபோல் அம்பாளும் எச்சமயமும் அருள்பாலிக்கின்றார். கிளி பக்தர்களின் கோரிக்கைகளை கிளி போன்று மீண்டும் மீண்டும் நினைவு கூருமாம்.

அம்பாள் அரசியானதால் அவரின் அபிஷேகத்தை பக்தர்கள் பார்க்க முடியாது. அலங்காரம் பூர்த்தியாகிய பின்னர்தான் வழிபட முடியும். எட்டுக் கால பூசை, எட்டுவித தோற்றம், எட்டு நாமங்கள் கொண்ட அரசி. திங்கட்கிழமைகளில் தங்கக்கவசம், வைரக்கிரீடம் ஆகியவை அணிந்து அருள்பாலிக்கிறாள்.



கிழக்கு வாசலில் ஒரு வாசல் அம்பாளுடையது. மற்றையது சிவனுடையது. மக்கள் அம்பாளை வணங்கி, சிவனிடம் செல்வர். சொக்கநாதர் மகிழும் மீனாட்சிக்கே முதல் பூசை நடைபெறும். பதிவிரதையாக இருந்த பத்தினி எப்போதும் கணவனுக்குத் தொண்டுசெய்யவென முன்னதாக எழுந்து, அபிஷேகமாகித் தயாராவதை இது குறிக்கும்.

சுந்தரேஸ்வரர் ஆலயம்:
சுந்தரம் + ஈஸ்வரர் - சுந்தரம் = அழகு, ஈஸ்வரர் = இறைவன். அம்பாளின் இடதுபக்க வாயிலால் அடைய முடியும். முதலில் 8 அடி உயரமுள்ள முக்குறுணிப் பிள்ளையாரிடம் சென்று வழிபட்ட பின்னர் சிவன் சந்நிதியை அடையலாம்.

கருவறை:

இந்திர விமானம், விண்ணிழி விமானம் என அழைக்கப்படுகிறது. சிவலிங்கம் சிறிய திருமேனி - ஆலவாய் அழகன் - சுந்தரன்.

வாசலில் இரு பெரிய துவாரபாலகர்கள் கம்பீரமாகக் காட்சி கொடுக்கின்றனர். உட்சென்றதும் பிரகாரத்தில் திருவிளையாடற்புராணம் அரங்கேறிய ஆறுகால் பீடம் உளது. 63 நாயன்மார் தரிசனம், கலைமகள் சந்நிதி, கடம்பமரம், பின்னர் வெள்ளியம்பலம். இங்கே கால் மாறிய ஆடிய அம்பலக் கூத்தனார் அற்புத அழகு காணலாம்.
பிரயாணம்:

பதின்ம வயதில் பெற்றோரோடு இக்கோயிலுக்குச் சென்றேன். அப்போது பார்த்தவை ஞாபகமில்லை. ஆனால் அன்று மதிய உணவின் போது விடுதிக்காரர் (Hotel) இன்று பாயசம் இனாம், ஒரு Bonus என்றார். பின்னர் மீனாட்சி அம்பாளின் திருக்கல்யாண நாள் எனவும் விவரித்தார். சித்திரை மாதத் திருவிழாவின் போது பத்தாம் நாள்தான் திருக்கல்யாணம் நடைபெறும். அன்று மதுரையே தங்கள் வீட்டுத் திருமணம் போல் கொண்டாடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனைத் தட்டைத் தேடி நாடிப் பெற்றோம். மதுரை மீனாட்சி அம்மன் செந்நிற உடையில் அருட்காட்சி கொடுத்தார். அர்ச்சனை செய்த பின்னர் நவக்கிரகங்களையும் ஏனைய பிரகார தெய்வங்களைகளையும் நன்றாகத் தரிசித்தோம்.

இறுதியில் சண்டேசுவரியைத் தேடிச் செல்லும் போது சுந்தரேசுவரர் பல்லக்கில் செல்லும் காட்சி கண்டோம். இக்காட்சி தற்போதும் கண்முன் நிற்கிறது. சுவாமி வலம் வந்து மீனாட்சி அம்மனிடம் சென்றால் அம்பாள் வெள்ளைநிறச் சேலை அணிந்து காட்சியளித்தார். கர்ப்பூர ஆராதனையின் பின்னர் திரை மூடப்பட்டது.

பள்ளி அறை அருகில் சுவாமி வருகைக்காகக் காத்திருந்தோம். பலவித தீபங்கள் காட்டப்பட்டன. பூர்த்தியாகக் கர்ப்பூர தீப ஆராதனை நடைபெற்றது. இதன்பின் எமக்கு விபூதி, பால், பூண்டு, கற்கண்டு கிடைத்ததில் மிக மிக மகிழ்ச்சி. இங்குள்ள அர்த்தசாமப் பூசை விசேடமானது கவனிக்கத்தக்கது.

07-04-2018 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி. உதவியாளரோடுதான் சென்றோம். அன்று பிரதோஷ நாளும் ஆகும். எமைச் சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது சிவபெருமான் மேள, தாளத்தோடு, நாதசுர ஒலியோடு வெகுவிமரிசையாக வீதியுலா வரக் கண்டேன். பசுமாடு, யானை முன் செல்ல வலம் சென்றது. வெள்ளிக்கிழமை தோறும் அம்பாள், சுவாமி ஊஞ்சல் ஆடும் விழாவிற்கு செல்வதாகும். இது பொற்றாமரைக் குளத்தின் மேற்கே உள்ள ஊஞ்சல் மண்டபத்தில் நடைபெறும்.

ஆயிரங்கால் மண்டபம்:


மிகச்சிறந்த மண்டபமாக பல மண்டபங்கள் உடைய தலத்தில் திகழ்கிறது. மண்டபத்தின் வாசலின் மேற்பக்கத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதையும் குறிக்கும் சக்கரம் கண்டு களிக்கலாம். மண்டபத்தின் நடுவில் பெரிதளவில் நடராசர் திருவுருவம் உளது. 985 தூண்கள் உடைய இம் மண்டபத்தில் எத்திசை நோக்கினாலும் தூண்கள் யாவும் ஒரே வரிசையில் காண்பது அதிசயம். அழகுமிக்க சிற்ப சிலைகள் கலைச்சுவைக்கு அழைத்துச் செல்லும். இதனாற்போலும் இங்கு கலைக்காட்சியும் நடைபெறுகிறது.

பொற்றாமரைக்குளம்:
சிவன் சூலத்தால் ஊன்றி உருவாக்கப்பட்டதாக கருதப்படுகிறது. 165 அடி நீளமும் 120 அடி அகலமும் உடையது. இந்திரன் பொற்றாமரை மலரால் பூசித்ததாக வரலாறு. ஆதி தீர்த்தம் எனவும் கூறுவர். அமாவாசை, கிரகண நாள்கள், தமிழ் மாத முதல் நாள்கள் நீராடி வழிபட்டால் வாழ்க்கையில் மேன்மை பெறலாம் எனவும் நம்பிக்கை. இக்குளத்தின் வடக்கு கரையில் உள்ள தூண்களில் சங்கப் புலவர்களின் உருவங்கள் உள.
பொற்றாமரைக் குளத்தில் சங்கப்பலகையில் திருக்குறள் நூலை வைத்த பின்னர் தான் அதை சங்கப்புலவர்கள் ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

மதுரை:
பாற்கடலைக் கடைந்தபோது ஆதிசேஷன் கக்கிய நஞ்சைச் சிவபெருமான் அமுதமாக - மதுரமாக மாற்றியதால் மதுரை என்ற பெயர் ஏற்பட்டது. சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் நடாத்திய இடம். பஞ்ச சபையில் வெள்ளிசபை. முப்பெருஞ் சக்தி பீடங்களில் ஒன்று. யோகநிலையில் இத்தலம் "துவாத சாந்தத்தலம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை என்றால் தமிழ். தமிழ்ச்சங்கம் அமைந்த இடம். தமிழனின் திருக்குறளின் பெருமையை நிலை நாட்டிய தமிழ் பண்பாட்டின் தலைநகரம். சமண சமயத்திலிருந்து மக்களை, அரசனை சைவ சமயத்துக்கு மீட்டது மதுரை. இறைவன் புலவர்களோடு ஒன்றாகவிருந்து தமிழை வளர்த்த இடமுமாகும். கபிலர், பரணர், நக்கீரர், மூர்த்தி நாயனார் வாழ்ந்ததும் மதுரையே!

அழகிய மதுரை தாமரை மலர் போன்றது. அதன் நடுவில் மொட்டு போன்று மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் மலரின் இதழ்கள் போன்று வரிசையான தெருக்கள். தெருக்களுக்கு தமிழ் மாத பெயர்களே இருக்கின்றன. முதற்சுற்று சித்திரை வீதியாகும். இவ்வீதியில் சித்திரைத் திருவிழா நடைபெறும். அடுத்தது ஆவணி, மாசி, ஆடி வீதி போன்றவை. தை வீதியில் தெப்பத் திருவிழா, ஆவணியில் மூலம் ஆடி வீதியில் சுவாமி அம்பாள் வலம் வருவது. இப்படியாக மாத விழாக்கள் அப்பெயருடைய வீதிகளில் நடப்பது இக்கோயிலின் சிறப்பு.

அம்பாளின் இடப்பாகம் ஆண்டவன் இருப்பது, பெண்மைக்கு முதலிடம் கொடுப்பதாகும். இதனாற் போலும் உங்கள் வீடு மதுரையா சிதம்பரமா எனக் கேட்பார்கள்.

மதுரை என்றால் மீனாட்சி, மீனாட்சி என்றால் மதுரை. இரண்டையும் பிரிக்க முடியாது. அம்பாள் சந்நிதி நுழைவு வாசலில் இருக்கும் சித்தி விநாயகர் சந்நிதி, விநாயகரின் நான்காவது படை வீடாகும்.

ஆலயதரிசனம்:
காலை 5:00 மணி - மதியம் 12:30
மாலை 4:00 மணி - இரவு 10:00 மணி
விமான மூலம் மதுரையை அடைந்து இத்தலத்திற்குச் செல்லலாம். புகையிரத மார்க்கமாக மதுரைப் புகையிரத நிலையம் அடையலாம். பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன.

மோட்டார் வாகனம் என்றால் NH7 நெடுஞ்சாலை அருகில் உளது.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே.
-சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறுபது நூல்களைப் பதிப்பித்த 'ஆறுமுக நாவலர்'

அடியேன் பிறந்தது சிதம்பரத்தில், கல்வி பெற்றதும், முதலில் மின்வாரியத்தில் பணிபுரிந்ததும் அங்கேயே. அப்போதெல்லாம் தினமும் மேலரத வீதியில் இருக்கும் ஆறுமுக நாவலர் உயர்நிலைப்பள்ளி வழியாகப் போகாத நாளே இல்லை எனலாம் அப்போதிலிருந்து நாவலரின் மீது எனக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. ஆனால் அவரின் பெருமையைத் தமிழ் உலகம் உணருமா என்ற தவிப்பும் உண்டு.

ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய அல்லது பதிப்பித்த நூல்பட்டியல்.--- அகர வரிசையில் இதுவே அவரின் பெருமைக்கு அவரின் தமிழ்த் தொண்டுக்குச் சான்று.

| | |
|---|---|
| அகத்தியர்அருளியதேவாரத்திரட்டு | அன்னம்பட்டியம் |
| இலக்கணக்கொத்து | இலக்கணச்சுருக்கம் |
| இலக்கணவிளக்கச்சூறாவளி | இலக்கணவினாவிடை |
| இலங்கைபூமிசாஸ்திரம் | ஏரெழுபது |
| கந்தபுராணவசனம் | கந்தபுராணம்பகுதி1-2 |
| கொலைமறுத்தல் | கோயிற்புராணம்(புதியஉரை) |
| சிதம்பரமான்மியம் | சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும் |
| சிவஞானபோதசிற்றுரை | சிவராத்திரிபுராணம் |
| சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மைவிளக்கம் | |
| சிவாலயதரிசனவிதி | சுப்பிரமணியபோதகம் |
| சூடாமணிநிகண்டுமூ.உரை | சேதுபுராணம் |
| சைவசமயநெறி | சைவதூஷணபரிகாரம் |
| சைவவினாவிடை | செளந்தர்யலகரிஉரை |
| ஞானகும்மி | தருக்கசங்கிரகம் |
| தருக்கசங்கிரகதீபிகை | தனிப்பாமாலை |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு. | திருக்குறள் மூ.பரிமேலழகர்உரை |
| திருக்கைவழக்கம் | திருக்கோவையார்மூலம் |
| திருக்கோவையார் நச்.உரை | திருச்செந்தூர் நிரோட்டயமகவந்தாதி |
| திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம் | திருத்தொண்டர்புராணம் |
| திருமுருகாற்றுப்படை | திருவாசகம்-மூலம் |
| திருவிளையாடற்புராணம்-மூலம் | திருவிளையாடற்புராணம்-வசனம் |
| தெய்வயாணையம்மைதிருமணப்படலம் | தொல்காப்பியம் சூத்திரவிருத்தி |
| தொல்காப்பியம்சொல்.சேனா.உரை | நன்னூல்-காண்டிகைஉரை |
| நன்னூல்-விருத்திஉரை | நீதிநூல்திரட்டுமூலமும்உரையும் |
| நைடத உரை | பதினோராம்திருமுறை |
| பாலபாடம்-4தொகுதிகள் | பிரபந்தத்திரட்டு |
| பிரயோகவிவேகம் | புட்பவிதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணவசனம்
மார்க்கண்டேயர்
வக்கிரதண்டம்
விநாயககவசம்
போலியருட்பாமறுப்பு
யாழ்ப்பாணச்சமயநிலை
வாக்குண்டாம்

அவரே எழுதிய சில நூல்களைத்தவிர, இதர இத்தனை நூல்களை ஓலைச் சுவடிகளில் இருந்து பாடபேதம் கண்டு அரும் பாடுபட்டுப் பதிப்பித்த அவரின் பெருமை தமிழ் உலகம் அறியுமா? எத்தனை உழைப்பும், ஆற்றலும் இத்தனை பதிப்பித்தலுக்குத் தேவை எனத் தமிழ்ச் சமூகம் புரிந்துகொள்ளுமா?

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதியருக்கு கடைசி மகவாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள்.

அப்போதைய அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களின் தாயார் ஆகும். தனது ஐந்தாவது வயதில் துவக்கக் கல்வியைத் தொடங்கிய நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார் ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார்.

அவரது 19வது வயதில்(1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் பாதிரியார் கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியாருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார். இலங்கை வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்.

சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து, செப்டம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார். அச்சு இயந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலகரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார். பிண்பு பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கி, சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை, திருநாகைக் கோராணம் ஆகிய இடங்களிலும் தங்கி, சைவப்பிரசங்கங்கள் செய்துவந்தார் .

1875க்கும் 1878க்கும் இடைப்பட்ட காலத்தில் நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திரு விளையாடல் புராணம், நன்னூற் காண்டிகையுரை, சிவபூசா விதி, மூன்றாம் அநுட்டான விதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சமக்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி முதலிய நூல்களை எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் ஈடுபட்டார். இவரது பணிகள் தமிழ் நாட்டிலும் , இலங்கையிலும் தொடர்ந்தன


.

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது.

05-12-1879 இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படி கட்டளையிட்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, சிவநாமம் செப்பியவாறே இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்..

சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றிய உயர்திரு ஆறுமுகநாவலர் அவர்களின் புகழ் அவர் பதித்த தமிழ் நூல்கள் இருக்கும் வரை நிலைத்திருக்கும் .

தகவல் - அண்ணாமலை சுகுமாரன்
தகவல்கள் இணையத்தில் விக்கியில் இருந்து திரட்டப்பட்டது .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியக் கடவுள்



சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரே என்பதைக் கந்தபுராணத்தில் இலகுவிற் காணலாம். சிவபெருமான் அப்படிச் சொல்லியருளியதாகச் சரிதங் கூறப்படுகிறது.

ஆதலி னமது சக்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்

மேலும், சுப்பிரமணியக் கடவுள் குருமூர்த்தியுமாம். "குருவடி வாய்வந்தென் உள்ளங் குளிரக் குதிகொண்டவே" என்பதைக் கந்தரலங்காரத்திற் காண்க. உலக குருவாகிய அகத்திய முனிவருக்கு இவரே குருவாயிருந்து அருளினார்.

"அருமறையா கமமங்க மருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருளை"

என்று சிவஞானசித்தியாரிற் (பரபக்கம் மங்க 5) கூறப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் குருவாக இருந்து, பாசங்களை நீக்குதற்கு ஆகவேண்டும் வழிகள் எல்லாவற்றையும் காட்டி, மோட்சத்தைத் தரும்படி நாம் சுப்பிரமணியக் கடவுளை வழிபடுகின்றோம். அவருக்குப் பக்கத்திலேயுள்ள தெய்வயானை அம்மை "கிரியாசத்தி"யாதலால், நல்ல செய்கைகளை நாங்கள் செய்ய அருளவேண்டும் என்று அவரைப் பணிகிறோம். வள்ளிநாயகி அம்மை "இச்சாசத்தி"யாதலால் நமக்கு நல்ல இச்சைகள் (விருப்பங்கள்) உண்டாக அருளவேண்டும் என்று அவரை வணங்கு கிறோம். முருகனுடைய திருக்கரத்திலே உள்ள வேலாயுதம் "ஞானசத்தி"யாதலால் நமது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தரும்படி வேலாயுதத்தை வணங்குகிறோம்.

சைவப் பெரியார் சு சிவபாதசுந்தரம் B.A.,
(சைவபோதம் இரண்டாம் புத்தகம்).






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சிவயோகம்
# SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









**சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.**

**வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

**நன்றி**

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

## ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

## SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: **020 8810 0835 020 8840 0485**

www.ammanealing.org Email: info@ammanealing.org







உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே — அபிராமி அந்தாதி

### புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் 2023

அம்பிகை அடியார்களே!

ஈலிங் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் திருவருள் துணையுடன் நிகழும் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள் **(01/06/2023)** வியாழக்கிழமை பகல் 10:30 மணி முதல் 11:34 மணி வரையுள்ள சுபநேரத்தில் நிகழ கைகூடியுள்ளது அனைவரும் வந்து தரிசித்து அம்மன் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். - சுபம் -

### கிரியா கால விபரம்

| | | |
|---|---|---|
| 25-05-2023 | வியாழன் | காலை 8:00 மணி முதல் விநாயக வழிபாடு முதலான கர்மாரம்பம் |
| 26-05-2023 | வெள்ளி | காலை 8:00மணி முதல் சாந்திகள், வஸ்துசாந்தி, ஸ்தாபனம் முதலானவை<br>மாலை 6:00 மணி முதல் லக்ஷ்மி பூஜை தீபஸ்தானம் |
| 29-05-2023 | திங்கள் | மாலை 5:00 மணி முதல் யாகாரம்பம்,<br>பிம்பஸ்தாபனம் முதலியன (சுவாமி வைத்தல்) |
| 30-05-2023 | செவ்வாய் | காலை 8:00 மணி முதல் தைலாப்பியங்கம் (31-05-2023 புதன்கிழமை<br>மாலை 05:00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.) |
| 01-06-2023 | வியாழன் | மஹாகும்பாபிஷேகம் பகல் 10:30 முதல் 11:35 மணி வரை |

பிரதிஷ்டா பிரதமகுரு முத்தமிழ் குருமணி சகலாகமசங்கிரகர்

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்** (ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்)

அவருடன் எங்கள் ஆலய குருமார்கள் மற்றைய இலண்டன் சிவாச்சாரியர்களும் இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இருந்தும் சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஏராளமான திருப்பணிகள் நிறைவேற்ற வேண்டி உள்ளமையை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.
முடிந்தளவு அனைவரதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது. பங்களிப்பிற்கு
Name: SKTAT TRUST, Lloyds Bank, Account No.: 69708160, Sort Code: 30-98-91

அனைவரும் வருக அம்மன் அருள் பெறுக


இங்ஙனம்

**ஆலய அறங்காவலர் சபை நிர்வாகசபை**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஏப்பிரல் (30-06-2023) தொடக்கம் ஜூன் (27-09-2023) வரை

| | | |
|---|---|---|
| 30.06.2023 | வெள்ளி | பிரதோஷம் |
| 14.07.2023 | வெள்ளி | பிரதோஷம் |
| 17.07.2023 | திங்கள் | ஆடிப்பிறப்பு |
| 22.07.2023 | சனி | ஆடிப் பூரம் |
| 26.07.2023 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| 30.07.2023 | ஞாயிறு | பிரதோஷம் |
| 09.08.2023 | புதன் | ஆடிக் கார்த்திகை |
| 13.08.2023 | ஞாயிறு | பிரதோஷம் |
| 15.08.2023 | செவ்வாய் | ஆடி அமாவாசை |
| 25.08.2023 | வெள்ளி | வரலட்சுமி விரதம் |
| 29.08.2023 | செவ்வாய் | நடேசர் அபிஷேகம் |
| 12.09.2023 | செவ்வாய் | பிரதோஷம் |
| 18.09.2023 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| 27.09.2023 | புதன் | நடேசர் அபிஷேகம், பிரதோஷம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*“Community Service Through Saiva (Hindu) Concern”*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 | |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |
| Post code | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ........................... Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| ____________________ Date | ____________________ Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed ‘Gift Aid’, I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| ____________________ President | ____________________ Hon. General Secretary | ____________________ Membership Secretary |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையை வசந்தமாக்கும் நவராத்திரிகள்

தட்சாயினி யதுகுலன்

முன்னைய காலங்களில் நவராத்திரி ஒவ்வொரு மாதமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்ததாக இதிகாசங்களில் சான்றுகள் சொல்கின்றன. அதாவது ஒவ்வொரு மாதத்தின் அமாவாசை முடிந்து வரும் ஒன்பது தினங்களும் சிறப்பான முறையில் அபிஷேகம், ஆராதனை எல்லாம் செய்து நவராத்திரி கொண்டாடப்பட்டு வந்தது. காலம் செல்லச் செல்ல நவராத்திரி கொண்டாடப்படும் பழக்கம் குறைந்துகொண்டே வந்தது.

இப்பொழுது நாம் இருக்கின்ற காலக்கட்டத்தில் நான்கு விதமான நவராத்திரிகள் மட்டுமே கொண்டாடப்பட்டு வருகின்றன. பொதுவாக நவராத்திரி என்றவுடன் புரட்டாதி மாதத்தில் வரும் ஆயுத பூசை, விசயதசமியுடன் கூடிய நவராத்திரி மட்டுமே நம் நினைவுக்கு வரும்.
நான்கு விதமான நவராத்திரிகள்:

- சாரதா நவராத்தி
- ஆஷாட நவராத்திரி
- சியாமளா நவராத்திரி
- வசந்த நவராத்திரி

சாரதா நவராத்திரி:

புரட்டாதி மாத அமாவாசை முடிந்து வரும் ஒன்பது நாள்களும் அம்மனை மனதார வேண்டி, படிக்கட்டுகள் எல்லாம் அமைத்து, கொலுக்கள் வைத்துப் பூசைகள் செய்வோம். இப்போது இந்த சாரதா நவராத்திரி மட்டும் மிகவும் பிரசித்தம் வாய்ந்ததாக இருக்கிறது. முதல் மூன்று நாள்கள் துர்க்கை அம்மனாகவும் அடுத்த மூன்று நாள்களும் மஹாலக்ஷ்மியாகவும் நிறைவு மூன்று நாள்கள் சரஸ்வதியாகவும் அம்பாளைப் பாராயணம் செய்து நாம் வணங்குகின்றோம்.

ஆஷாட நவராத்திரி:

ஆனி மாதம் அமாவாசை முடிந்து வரும் ஒன்பது தினங்களும் அம்பிகையின் படைத்தளபதியான வாராஹி அம்பாளை நினனத்து இந்த நவராத்திரி கொண்டாடப்படுகின்றது. ஆனி மாதம் என்பது சந்திரனை அடிப்படையாகக்கொண்ட மாதங்களில் ஒன்று. பொதுவாக ஆனி, ஆடி மாதங்கள் விவசாயத்துக்கு உகந்தவை. இந்த மாதங்களில்தான் புதிய மழை பெய்து நிலம் விதைப்பதற்கு உகந்ததாக இருக்கும். எனவே இந்த காலத்தில் நாம்வழிபட வேண்டிய தெய்வம் வாராஹிஅம்மன்.

சியாமளா நவராத்திரி:

தை மாத அமாவாசை முடிந்து வரும் ஒன்பது தினங்களும் அம்பிகையின் மந்திரியான சியாமளையை நினைத்து வழிபாடு செய்யப்படும். சியாமளா நவராத்திரியின் ஐந்தாவது நாளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்த பஞ்சமியில் ஸ்ரீ சரஸ்வதி தேவி திருஅவதாரம் செய்ததாக ஐதீகம். இந்த நாளன்று வித்யாரம்பம் கூட செய்து சரஸ்வதி தேவியின் அருளைப் பெற்றுக் கொள்ளலாம்.
வசந்த நவராத்திரி:

பங்குனி மாத அமாவாசை முடிந்து வரும் ஒன்பது நாள்களும் லலிதா திரிபுரசுந்தரி தாயாரை மனதார வேண்டி வழிபடும் நவராத்திரி இதுவாகும். இந்த நவராத்திரியின் தனிச் சிறப்பு என்ன என்று பார்த்தால், பங்குனி மாத அமாவாசை முடிந்து வரும் பிரதமை அன்று தெலுங்கு உஹாதி கொண்டாடப்படும். நிறைவாக முடிகின்ற நாளான நவமி அன்று ஸ்ரீராமநவமி கொண்டாடப்படுகின்றது.

வசந்த நவராத்திரியும் சாராதா நவராத்திரியும் நவராத்திரி வகைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றது. அக்னிபுராணத்தில் வருடத்தில் நான்கு நவராத்திரி கொண்டாட முடியாதோர் சாரதா, வசந்த நவராத்திரிகளைக் கொண்டாடுவது மிகவும் அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வசந்த நவராத்திரி பங்குனி மாதத்தில் வருகின்றது. சாரதா நவராத்திரி புரட்டாதி மாதத்தில் வருகின்றது. பங்குனி, புரட்டாதி மாதங்கள் பூமியின் வெப்ப நிலை மாறுவதற்கு உண்டான மாதங்கள். புரட்டாதி மாதத்தில் குளிர் ஆரம்பிக்கும். பங்குனி மாதத்தில் வெய்யில் ஆரம்பிக்கும். அதனாலேயே இந்த இரண்டு மாதங்களும் எமதர்மனின் இரு தாடைகளாக, அதாவது மகாரைப்பற்களாக புராணங்களில் குறிப்பிடப்படுகின்றன.

வெப்ப நிலை மாறுவதால் நோய் வாய்ப்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். இதனாலேயே இந்த நவராத்திரி நாள்களில் அம்பிகையை முறையாக வழிபாடு செய்து வந்தால் நோய் வாய்ப்படுகின்ற பிரச்சனை எல்லாவற்றிலிருந்தும் அம்பிகை நம்மைக் காத்தருள்வாள் என்ற நம்பிக்கையிலேயே இந்த வசந்த நவராத்திரியும் சாரதா நவராத்திரியும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன.

# சில தகவல்கள் (திருவாரூர் ஆலயம்)

**நயினார்கள்**

தமிழகத்துச் சிவாலயங்களில் பூசை செய்யும் அந்தணர்கள் சிவாசாரியார்கள், குருக்கள் என்றே அழைக்கப் பெறுகிறார்கள். ஆனால் திருவாரூர் தியாகருக்கு பூசை செய்யும் அந்தணர்களுக்குரிய சிறப்புப்பெயர் நயினார் என்பதாகும். இவர்கள் துர்வாச மகரிஷியின் மரபில் தோன்றியவர்கள். காசிப கோத்திரத்தை சேர்ந்தவர்கள். திருமூலட்டானத்து இறைவர், தியாகராசப் பெருமானின் திருமேனி போன்ற முக்கிய திருமேனிகளுக்கு மட்டுமே காமிக ஆகமம் வழுவாது பூசைகளைப் புரிவதே இவர்களின் சிறப்புப் பணியாகும். தியாராசப்பெருமான் இராச கோலத்தில் வீற்றிருப்பதால் அவருக்குப் பூசை செய்யும் நயினார்கள் யோக வேட்டியை மார்பில் போர்த்தியவாறே பூசை செய்கிறார்கள். இது தமிழகத்தில் ஆரூரில் மட்டுமே நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

**திருநீறு (திருமந்திரம்)**

சைவத்தின் பெருமையே திருநீறாகும். "முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு".... என்று ஞானசம்பந்தர் போற்றும் பெருமை உடையது நாம் அணியும் சைவம் போற்றும் திருநீற்றை திருவாரூர் திருக்கோயிலில் "திருமந்திரம்" என்றே குறிப்பிடுவது அக்கோயிலின் மரபாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாரூரில் கணபதியார்



தொகுப்பு: சிவபுத்திரன்

திருவாரூர் என்றவுடன் அங்கிருக்கும் அருள்மிகு தியாகராசசுவாமி திருக்கோயில்தான் எல்லோருக்கும் ஞாபகத்தில் வரும். சிதம்பரம் அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்திற்கும் முற்பட்ட ஆலயம் என்றும் இவ்வாலயத்தைக் கூறுவர்.

அருள்மிகு தியாகராசசுவாமிகள் ஆலயத்தில் இருக்கும் கணபதி தெய்வம் பற்றிய சில குறிப்புக்களைப் பார்ப்போம்.

வரலாற்று ரீதியாக அரசர்கள் எப்பொழுதுமே தங்கள் நாட்டைச் சுற்றியுள்ள நாடுகளைத் தங்கள் ஆட்சியின்கீழ் கொண்டுவருவதற்காகப் போர் செய்து வருவது வழக்கம். அது குறுநில மன்னர்கள் தாங்கள் பெருநில மன்னர்களாக வேண்டும் என்ற ஆசையின் உந்துதலினால் உருவானது. அந்தவகையில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட முதலாம் நரசிம்ம பல்லவன் தனது படைகளை தலமைத் தளபதியாகிய பரஞ்சோதி என்பவருடைய தலைமையில் மேலைச்சாளுக்கிய தேசத்திற்கு அனுப்புகிறான். பரஞ்சோதி தலைமையில் சென்ற படைகள் அந்த நாட்டை வென்று திரும்பும் வழியில் வாதாபி நகரில் இருந்த கணபதியைக் கவர்ந்து வந்து அதைத் தன் படைகளின் வெற்றியின் சின்னமாக அரசனிடம் கொடுக்கிறான். பின் அக்கணபதி திருவுருவச்சிலையைத் தளபதியாகிய பரஞ்சோதி தன்னுடைய ஊரான திருச்செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்து வழிபாட்டை நடத்தினான். வாதாபில் இருந்து கொண்டுவந்தபடியால் “வாதாபி கணபதி” என குறிப்பிடப்பட்டு இன்று வரை பூசிக்கப்பட்டு வருகிறது.



ஆனால் இங்குதான் ஒரு ஐயம் எழுகிறது. திருவாரூரில், தியாகராசசுவாமிகள் ஆலயத்தில் உள்ள கணபதியையும் “வாதாபி விநாயகர்” என்றே சொல்கிறார்கள். ஆய்வுகளின் அடிப்படையில் திருச்செங்காட்டங்குடியில் உள்ள வாதாபி கணபதி திருவுருவச்சிலை சோழர்காலத்து சிற்பக்கலை அம்சங்களைக் கொண்டதாக உள்ளது. திருவாரூர் தியாகராசர் சுவாமிகள் ஆலயத்தில் உள்ள “வாதாபி கணபதி” திருவுருவச்சிலை மேலைச்சாளுக்கியர்களின் சிற்பக்கலை அம்சங்களை உள்ளடக்கியதாக இருப்பதால் இதுவே “வாதாபி விநாயகர்” என்று கூறுவர். சிற்ப இயல் அடிப்படையில் இவை வேறுபாடுடையதாகக் காணப்படுகின்றன.

ஆரூர் திருக்கோயில் உள்ள திருமூலட்டானத்தில் உள்ள மற்றுமொரு கணபதியார் செப்புத் திருமேனியுடையவராக இருப்பதால் இவரை “ஐங்கலக் காசு விநாயகர்” எனச் சொல்கின்றனர். அறுவகைச் சமயத்தில் ஒன்றான “சாக்தம்” என்ற நெறியில் போற்றப்படும் கணபதியார் திருமேனியை “உச்சிஷ்ட கணபதி” என்று கூறப்படுகிறது. இத்திருமேனி திருக்கோயில் முன் மண்டபத்தில் கமலாம்பாள் சந்நிதி அருகில் காணப்படுகிறார். கணபதியார் தமது தேவியாரைத் தம் தொடைமேல் அமர்த்தி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் காணப்படுகிறார்.

இது ஒரு சோழர் காலப் படைப்பாகும். இச் சிலையில் உள்ள மிக முக்கிய அம்சம் என்னவென்றால் பெண்ணின் யோனியில் தமது துதிக்கையை வைத்தவராகக் காமமோகிதராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலவண்ணம் உடையவராக கணபதியார் காணப்படுகிறார். இத்தகைய கற்சிலைகள் தமிழகத்தில் கும்பகோணம் நாகேஸ்வரர் கோயில், தாராபுரம் திருக்கோயில் போன்ற இடங்களில் மட்டுமே உண்டு.





திருவாரூரைத் தவிர வேறு எங்குமே காணக்கிடைக்காத கணபதியாரின் ஒரு வடிவம் இவ்வாலயத்தில் உண்டு. அத்திருவடிவே "மூலாதார கணபதி" யாவர். இத்திருமேனி பூங்கோயிலில் அமைந்துள்ள முதற்சுற்றில், சுருண்டு படுத்த நிலையில் ஐந்தலை அரவு கிடக்க அதன் சுருள் உடலின் மத்தியில் விரிந்த தாமரை மலரில் அதன் மேல் நர்த்தன கணபதியாக பாசாங்குசமும் மோதகமும் தந்தமும் ஏந்திய கணபதியார் காட்சி தர, பூதகணங்கள் இரண்டு பக்கமும் தாளமும் மத்தளமும் இசைக்கின்ற காட்சி காணப்படுகிறது.



மற்றொரு மண்டபமான தட்டாஞ்சுற்றி மண்டபத்தில் "வல்லப விநாயகர்" பத்து கரங்களுடனும், கையில் தேவியை அணைத்த வண்ணமும் காட்சி தருகிறார். வலது கரங்களில் சக்கரம், திரிசூலம், கத்தி, அங்குசம், அமுதகலசம் ஆகியவற்றையும்: தாமரை, பாசம், சாமரம், மழு போன்றவற்றை இடது கரங்களிலுமாக காட்சி தருகிறார்.

சுந்தரமூர்த்தி நாயனார் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைக் கமலாலயத்தில் தீர்த்தக் குளத்தில் தேடி எடுத்து தான் வைத்திருந்த பொன்னை இங்கிருக்கும் விநாயகப் பெருமானின் உதவியால் உரைத்து நோக்கியதாக கூறப்படும் "மாற்றுரைத்த விநாயகர்" தீர்த்தக் குளத்தின் வடகிழக்கு மூலையில் அமர்ந்து அருள்புரிகிறார்,



இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர் செம்பொனும் மணியுந் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே

- சுந்தரமூர்த்தி நாயனார்
தி - 07, ப - 08, பா 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thirukkural Stories

# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## வினைத்திட்பம்
## Power in Action

அதிகாரம்: 67 குறள்: 667
Chapter 67 Kural667

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

பொருள்:

உருவத்தால் சிறியவர்கள் என்பதற்காக யாரையும் கேலி செய்து அலட்சியப்படுத்தக் கூடாது. பெரிய தேர் ஓடுவதற்குக் காரணமான அச்சாணி உருவத்தால் சிறியதுதான் என்பதை உணர வேண்டும்.

Despise not men of modest bearing; look not at form, but what men are; for some there live, high functions sharing, like lynch- pin of the mighty car.

மகாபாரதப் போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒருநாள் கிருஷ்ண பரமாத்மா ஆகிய கண்ணன் வீதி வழியே போனபோது, உதங்க முனிவர் எதிரே வந்தார். கண்ணனுடைய நெருங்கிய நண்பர்களில் அவரும் ஒருவர். ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தனர்.

அதுநாள்வரை காட்டில் வாசம் செய்து கொண்டிருந்த உதங்கருக்கு நாட்டு நடப்பு எதுவும் தெரியாது.

“நாட்டு நடப்பெல்லாம் எப்படி?” என்று கண்ணனிடம் கேட்டார். “யாவும் நல்லபடி நடக்கிறது. மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள்” என்று கண்ணன் சொன்னான்.

ஹஸ்தினாபுரம் பற்றிப் பேச்சுத் திரும்பியது. சூதாட்டத்தில் தொடங்கி, அது போர் வரைக்கும் சென்று, கௌரவர்கள் தோல்வியுற்றதைக் கண்ணன் விளக்க, பீஷ்மர், துரோணர் போன்றோர் இறந்து போனதை அறிந்தபோது உதங்கர் பதட்டமானார்.

“கண்ணா! நீ நினைத்திருந்தால் இவற்றையெல்லாம் தடுத்திருக்கலாம். எல்லாம் உன்னால் தான் நடந்தது” என்று கண்ணன் மீது கோபங்கொண்டு உதங்கர் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் எத்தனையோ தடுத்தும் யாரும் கேட்கவில்லை" என்ற பதிலும் உதங்கரைத் திருப்திப் படுத்தவில்லை. மீண்டும் கோபமாக, கண்ணனுக்குச் சாபமிடப்போவதாகக் கூற, கண்ணன் தன் விஸ்வரூபத்தைக் காட்டினான்.

"உதங்கா ! எனது விஸ்வரூபம் கண்டாய், உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்று கண்ணன் கேட்க, முதலில் மறுத்த உதங்கர்,

"நான் ஊர் ஊராகத் திரிவேன். எனக்குத் தாகம் எடுக்கும் போதெல்லாம் நீ தண்ணீர் தர வேண்டும்" என்று வரம் கேட்டார்.

"சரி; தருகிறேன். ஆனால் எப்படி வந்தாலும் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். உதங்கரும் சம்மதித்தார்.

சில காலம் சென்றது. ஒருநாள் உதங்கர் நடைப்பயணம் மேற்கொண்டபோது தாகம் எடுத்தது. "கண்ணா! எனக்குத் தண்ணீர் வேண்டும்" என்று கேட்டார். இந்த வேண்டுதல் கண்ணனுக்குக் கேட்டது. உடனே அவன், தேவலோகத்திலுள்ள இந்திரனிடம் உதங்கருக்குத் தேவாமிர்தம் அனுப்பிவிடும்படி சொல்கிறான். "மனிதர்களுக்கு நான் தேவாமிர்தம் கொடுப்பதில்லை" என்று முதலில் மறுத்த இந்திரன், பிறகு சம்மதித்து ஒரு நிபந்தனையை விதித்தார்.

"நான் விரும்பியபடிதான் அனுப்புவேன்" என்று கூறி, அதற்கமைய, நிறைந்த கந்தல் ஆடையை அணிந்த ஒருவனாகக் கையில் ஒரு தகரக் குவளையுடன் உதங்கரிடம் போகிறான். அவனுடன் கூடவே ஒரு சொறிநாயும் இருந்தது. இவர்களைக்கண்ட உதங்கருக்கு ஆத்திரம் மேலிடுகிறது. "தண்ணீர் வேண்டாம்" என்று அவனைத் துரத்திவிட்டார்.

பிறிதொருநாளில் உதங்கர் மீண்டும் கண்ணனைச் சந்தித்தபோது, இச் சம்பவம்பற்றிக் கோபமாக அவனிடம் பேசினார். கண்ணன், நடந்த உண்மை எல்லாம் சொல்லி, தேடி வந்த தேவாமிர்தத்தை உதங்கர் இழந்துவிட்ட விவரத்தைச் சொன்னான். உதங்கர் தன் தவறை உணர்ந்து வருந்தினார். புறத்தோற்றம் முக்கியமல்ல. தோற்றத்துக்குப்பின் என்ன இருக்கிறது என்பதை உணர்வதே முக்கியம் என்ற தத்துவத்தை ஒரு ஞானியாக இருந்தும் உதங்கர் உணரத் தவறிவிட்டார்.

Many years passed by after the Makabharatha war came to an end. One day, Lord Krishna, the so called Kannan, when going along a path, saw Uthanga Munivar coming in front of him. He was one of the close friends of Kannan. Both greeted each other. Since Uthangar had been living in the jungle foe a long time, he didn't know the situation in the country and so asked Kannan about it.

'How is everything in the city?' asked Uthangar
'All is well Uthanga. People are happy' replied Kannan

Uthangar then asked about Hasthinapura.

'Initiated by gambling, the situation turned badly, ending in a war, in which Bheeshma, Thurona and many others lost their lives' was the explanation given by Kannan. Uthangar got tensed by this information and got angry.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'Kanna! You would have stopped such crisis if you wished. But, you didn't. You are the cause for all these!' Uthangar commented angrily.

'It was trying my best to avoid all these. But, nobody listened to me' Kannan told Uthangar. But Uthangar was not satisfied with this reply and told that he was going to impose a spell upon Kannan. Kannan then showed his 'Vishvaroopam' to Uthangar, revealing who he was.

Then he asked Uthangar whether he wanted any boon to be offered to him. First, Uthangar declined the offer but then he asked, 'I am always travelling all over the places. Whenever and wherever I feel thirsty, you offer me water' for which Kannan agreed with a condition.

'I will offer you the boon. But, you should accept the water in whatever condition it reaches you'. Uthangar agreed.

Days passed. One day when Uthangar was on a long walk, he got thirsty and called Kannan requesting water. On hearing this, Lord Krishna asked Indran to send the awesome 'Thevamirtham' to Uthangar. Indran first refused saying that he doesn't sent Thevamirtham to humans but then he agreed with a condition.

'I will send it in a way that I wish to' Indran said.

Accordingly, a man who looked like a beggar, wearing dirty and torn off attire, appeared in front of Uthangar with a tin in his hands. A stray dog also was there with that man. On seeing all these, Uthangar refused to accept the water and chased that man away.

After some time, on another day, when Uthanakar met Kannan, he told this incident with anger to Kannan. Lord Krishna-Kannan- revealed the true details and told Uthangar that he lost the precious Thevamirtham offered to him by Indran. Uthangar realised everything and felt sorry for the mistake he made.

Let none be despised for their appearance was the lesson Uthangar was taught by this incident.

## திருவாசகத்தில் தேன்

- சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
- வந்திங்கு ஆட்கொண்ட தேனே
- தேனே அமுதே சிந்தைக் கரியானே
- தேனே அமுதே கரும்பின் தெளிவே
- தேனாய் அமுதமாய் தீங்கரும்பின் கட்டியாய்
- தேன் தங்கி தித்தித்து அமுதூறி
- தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவத்தில் சமத்துவம்



இயற்கை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் சிவத்தை வழிபடு தெய்வமாகக் கொண்டு வழிபட்டதனால் சைவர்களெனக் கொள்ளப்பட்டனர். அத்துடன் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் விவசாயத் தொழிலைச் செய்து சைவ உணவை உட்கொண்டு வந்ததமையினாலும் தமிழர் என்றால் சைவர்கள் எனவும் எண்ணப்பட்டு வந்தது. வட இந்தியாவில் பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் தோன்றின. எனினும் முகலாயர், ஐரோப்பியர், காலனித்துவ ஆட்சிகள் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் ஏற்பட்டமையால் இஸ்லாம், கிறித்துவம் ஆகிய மதங்களும் பரவியிருப்பினும் காலத்தினால் மிகப் பழமையானது சைவ சமயமே. தமிழ் மக்கள் சிவபெருமானிடத்து மெய்யன்பு கொண்டு ஒழுகி வந்தமையால் அனைவரிடமும் அன்பு கொண்டு வாழ்ந்தார்கள்; சாதிப் பாகுபாடு பாராட்டாத நடைமுறையைக் கொண்டிருந்தார்கள் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

மூவர் முதலிகள் பாடி அருளிய தேவாரத் திருப்பதிகங்களைத் தில்லை வாழ் அந்தணர்கள் இருட்டறையில் இட்டு கரையான்களுக்கு இரையாக்கினர் என்பர். அக்காலத்தில் மக்களிடையே அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய பெரும் பிரிவுகள் இருந்தன. வணிகம் செய்வோர் வணிகர் எனவும் வேளாண்மை செய்வோர் வேளாளர் எனவும் இரக்க குணமுடையோர் ஆலயங்களில் தொண்டாற்றும் அந்தணர் எனவும், ஆட்சிப் பொறுப்பேற்று நடத்துபவர் அரசர் எனவும் கருதப்பட்டனர். உயர்வு தாழ்வு கடைப் பிடிக்கும் பிற்காலத்தில் தோன்றிய சாதிகள் போல்வன அல்ல அவை. தொழில் அமைப்பில் ஏற்பட்ட வேறு பாடுகளே அன்றைய சமுதாய அமைப்பு முறையாகும்.

சங்க காலத்து புறநானூறு பாடல் ஒன்றில் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

**க.செல்வரத்தினம்**

“வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே”

(புறநானூறு 183:9-11)

இந்நால்வகைப் பிரிவுகள் ஆரியத் தொடர்பினால் பெருகி நானூறு சாதிகளாகப் பெருகிவிட்டன.

சுந்தரமூர்த்தி நாயனார்,

“மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி” யவர்

எனச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.
ஆதிசைவ அந்தணர் குலத்தில் தோன்றிய சுந்தரர் “தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்” எனக் கூறியிருப்பது சாதி வேறுபாடற்ற தன்மையைக் காட்டிநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சுந்தரர் அந்தணர் குலத்திலும் குறைவென்று கருதப்படும் கணிகையர் குலத்தைச் சேர்ந்த பரவையாரையும், வேளாளர் குலத்தைச் சேரந்த சங்கிலியாரையும் மணந்து கொண்டது சமுதாயப் புரட்சியாகும்

திஞானசம்பந்தர் அந்தணர் குலத்தவராய் இருந்தும், பாணர் குலத்தில் உள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவரது துணைவியார் மதங்க சூளாமணியாரையும் சாதி வேறுபாடு கருதாமல் தாம் செல்லும் இடங்கட் கெல்லாம் அழைத்துச் சென்று பெருமைப்படுத்தினார். மேலும் சாத்தனூரில் வாழ்ந்த அந்தணரான திருநீலநக்கர் இல்லத்திலே சம்பந்தர் தங்க நேர்ந்தபோது, வீட்டின் நடுவே வேள்வி செய்யும் மேடை அருகே தம்மோடு அழைத்துவந்து திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தங்க இடங்கொடுத்தார். அப்போதுவரை அணையாதிருந்த வேள்வித் தீ முன்னை விடப் பிரகாசமாக ஒளிவீசியது.

“அங்கு வேதியில் அறாதசெந் தீவலம் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிர”

பாடல் 1863 திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

அப்பர் வாழ்வில்:

அந்நாளில் ஆளுடைய பிள்ளை அம்மையார் திருமுலைப்பால் உண்ட செய்தி நாடெல்லாம் பரவியது. ஆளுடையபிள்ளையின் சேவடியை வணங்குதல் வேண்டுமென அப்பருக்கு வேட்கை எழுந்தது. திருநாவுக்கரசர் அவரைப் பல்லக்கில் சுமந்த செயல் குழந்தைக்கு தெரியாமல் நடந்த நிகழ்வாகும். இருவரும் எதிர் கொள்கின்றனர். உடனே திருநாவுக்கரசர் பிள்ளையின் காலடியில் வீழ்ந்து வணங்க, பிள்ளையார் “அப்பரே!” என அரசரும் “அடியேன்” என்றார்.

அப்பூதி அடிகளார் அந்தணர் குலத்தில் தோன்றியவராயினும் நாவுக்கரசரின் புகழ் கேட்டு, தம் வீட்டுப் பொருள்களுக்கும், மடம், கிணறு, தண்ணீர்ப் பந்தல் அனைத்துக்கும் தம் பிள்ளைகளுக்கும் “திருநாவுக்கரசு” என்றே பெயரிட்டார். அந்தணர், வேளாளர் என்னும் வேறுபாடு எண்ணாமல் அவரை வீட்டுக்குள்ளேயே அழைத்ததோடு அவரின் குடும்பத்தவர் அனைவரும் நாவரசரது காலடியில் வீழ்ந்து வணங்கிய செயல் பெருமைக்கு உரியதாகும்.

கண்ணப்பர் வாழ்வில்:

வேடர் குலத்தில் தோன்றியவர் கண்ணப்பர். சிவபெருமானுக்குப் பூசை செய்யும் சிவகோசரியார் என்ற அந்தணர்க்குக் கிடைக்காத திருவருட்பேற்றினைக் கண்ணப்பர் பெற்றார்.

அந்தணரது கனவில்

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீயென் றருள் செய்வார்.

(பெ. பு கண்ணப்பர் 157)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வுயிரிலும் அன்பு செலுத்தவேண்டும்; சிவம் என்பதே அன்பு என்கிறார் திருமூலர்.

அன்புசிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

என்று கூறுகிறது திருமந்திரம்.

திருக்குறளில் சமத்துவம்:

எல்லா உயிரக்கும் பிறப்பானது ஒரே தன்மையாக அமைந்தது தான்.: அவையவை தாம் செய்யும் தொழில் வேற்றுமையாலே தாம் சிறப்பிலே வேறுபட்டிருக்கும் என்பதை:

பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் - குறள் - 972

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் - குறள் - 251

என்பதால் குறள் கருணைநெறியையும் காட்டி நிற்கிறது.

ஔவையார்:

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி - நல்வழி

தாயுமானவர்:

எவ்வுயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!

அமரகவி எனப் போற்றப்படும் பாரதியாரும் இதனையே குழந்தைகளுக்கு விளக்குகிறார்.

வெள்ளை நிறத்தொரு பூனை -எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை அவை பேருக்கொரு நிறமாகும்
எந்த நிறமிருந்தாலும் அவையாவும் ஒரு தரமன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிறம் சிறிதென்றும் இ..்து ஏற்றமென்றும் சொல்லலாமோ? அப்படி வேற்றுமை சொல்வது தவறு என்று பாரதியார் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும்-

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் -இது
வாழும் முறைமையடி பாப்பா

அன்பென்று கொட்ட முரசே மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

இந்தக் கட்டுரை ஆசிரியர், திரு க செல்வரத்தினம் அவர்கள் 106ஆவது கலசம் இதழில் சித்திரைச் சிறப்புக்கள் என்ற கட்டுரையையும் எழுதியிருந்தார். அச்சுக்குப் போகும்போது அவரின் பெயர் கட்டுரைப் பக்கத்தில் இருந்து தவறிவிட்டது. அந்தத் தவறுக்கு வருந்துகிறோம்.

- கலசம் ஆசிரியர் -

## அருணகிரியார் பாடல்கள்

அருணகிரியார் தம்முடைய பாடல்களில் தமக்குக் கிடைத்த இன்ப அநுபவங்களை மாத்திரம் சொல்லியிருந்தாரானால் அவற்றைப் படிக்கும்போது நாம் வியப்படைவதோடு நிற்போம். அவருடைய அநுபவத்தை நாம் பெறாதவர்கள் ஆகையினாலே "அப்படி ஏற்படுமா? அது சாத்தியமா?" என்று சிலசமயம் யோசனை செய்வோம். ஆனால் அவர் தம்முடைய பாட்டிலே பலவிதமான குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, "அப்படி இருந்த நான் இத்தகைய இன்பங்களைப் பெறும்படி செய்தாயே!" என்று எம்பெருமானைப் பார்த்துச் சொல்லும்போது நாமும் அவர் கூறியுள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் உடையவர்களாக இருப்பதனால், "அடடா, நாமும் அவர் முதலில் இருந்ததுபோலத்தானே இருக்கிறோம்? அவர் சொல்கிறபடி முருகனை வழிபட்டால் அவர் அநுபவித்த இன்ப நலங்களை நாமும் பெறலாமே!" என்ற நம்பிக்கை நமக்கு எழுகிறது. முயற்சி செய்ய ஆவலும் எழுகிறது.

தோத்திர நூல்களில் இறைவன் புகழ் மாத்திரம் இராது. அர்ச்சனையும் இருக்கும். குறைபாடுகளைச் சொல்லி வருந்துவதும் இருக்கும். சாஸ்திர நூல்களில் இறைவனின் இயல்பும் தத்துவங்களின் இலக்கணமும் இருக்கும். கந்தர் அலங்காரத்திலே உயர்ந்த நிலையில் இருப்பார்களுக்கு ஏற்ற பொருள்களும் இருக்கின்றன. மிகவும் இழிந்த நிலையில் உள்ளவர்களும் மேல்நிலைக்குப் போவதற்கான வழிகளும் இருக்கின்றன.

அருணகிரியாரின் பாடல்கள் அற்புதமான கண்ணாடியாக அமைந்திருக்கின்றன. அந்தக் கண்ணாடி ஒரே சமயத்தில் நமக்கு முருகப்பெருமானையும் காட்டுகிறது; நமது அலங்கோல வாழ்வையும் காட்டுகிறது. அருள் பெறாமல் அவல நிலையில் உழன்றுகொண்டிருக்கும் நம்மையும் காட்டி, அருள் வழங்கும் வள்ளற்பிரானாகிய முருகனையும் காட்டுகிற அருணகிரியாரின் தோத்திரப் பாடல்கள் சாஸ்திரத்தில் உள்ள உண்மையையும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

நன்றி: கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்
வாகீச கலாநிதி கி வா ஜகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி சபதம்



சென்ற இதழ்த் தொடர்ச்சி....

தன்னிகரற்ற மன வலிமையும் உடல் வலிமையையும் கொண்ட வீமனைச் சூதாட்டத்தில் பணயமாக வைத்து உன் பொய்யான சூதாட்டத்தில் வென்று தொலை என்று சகுனிக்குக் கூறியதுமே, அந்த வஞ்சகன் ஒரு நொடியில் வென்றெடுத்தான். அவன் வகுத்த சதித் திட்டத்தின்படி ஒவ்வொன்றாக வென்றெடுத்துக் கொண்டு வருகிறான். மதிநுட்பம் மிக்க தர்மரும் சகுனியின் மாய வலையில் சிக்கி அதினின்று வெளிவர எத்தனிக்காது அவன் இழுத்த பக்கத்திற்கு இழுபட்டுச் செல்வதைக் காண முடிகிறது. அறிவில் மேம்பட்டவர்களான பீஷ்மர், துரோணர், விதுரன் உட்படப்பலர் இருந்த போதும் சூது இப்படித் தொடர்வதற்கான காரணம் புரியாத புதிராக உள்ளது. இவர்கள், வர இருப்பதை முன்கூட்டியே அறியும் தீர்க்க தரிசனம் உள்ளவர்கள் என்பது காரணமோ? தன்னைவிடப் பலம் மிக்க வீமனை வென்றெடுத்துவிட்டான் மாமன் என்பதைக் கண்டதும் துரியோதனன் அளவற்ற மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். இதனைப் பாரதியார், யானை ஒன்று கொல்லப்பட்டவுடன் தமக்கு நிறைய உணவு கிடைத்ததே எனற மகிழ்ச்சியால் பூதங்கள், நாய், நரிகள், காகங்கள், கழுகுகள் யாவும் துள்ளிக் குதிப்பதைப் போல துரியோதனன் சகோதரர்களுடன் கூடி மகிழ்ந்த விதத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

போரினில் யானை விழக்கண்ட - பல
பூதங்கள் நாய்நரி காகங்கள் - புலை
ஓரி கழுகுகென் றிவையெலாம் - தம
துள்ளங் களிகொண்டு விம்மல்போல் - மிகச்
சீரிய வீமனைச் சூதினில் அந்தத்
தீயர் விழுந்திடக் காணலும் - நின்று
மார்பிலுந் தோளிலுங் கொட்டினார் - களி
மண்டிக் குதித்தெழுந் தாடுவார்.

அநுஜா

அங்கு கூடியிருந்த மன்னர்கள் யாவரும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதர்மக் கூத்தைக் கண்டு, நடப்பது உண்மையோ பொய்யோ என்று அறிய முடியாது தடுமாறி நின்றனர். ஒரு செல்வந்தர் மாளிகையில் நுழைந்த திருடர் கூட்டம் ஆசைவெறி பிடித்து எல்லாவற்றையும் அள்ளுவது போலப் பாண்டவர் செல்வத்தை மட்டுமன்றி, அந்த அரச குடும்பத்தினரையும் வென்றெடுக்கக் கங்கணம் கட்டி நிற்பதைப் பாரதியார் வெறிபிடித்த திருடர் எனச் சகுனியையும் தீயோரையும் வர்ணிக்கிறார். சகுனியும் தன் வெற்றியை எண்ணி மகிழ்ந்து வஞ்சகத்துடன் மெதுவாகச் சிரித்துக்கொண்டு ஏதாவது பணயமாக இருந்தால் சொல்லுவாயாக என்று தர்மரைக் கேட்கிறார். தன் சுயநினைவை இழந்த தர்மர் தன்னிடம் வேறு எதுவுமே இல்லை என்பதிலோ என்னவோ என்னை வைக்கிறேன் என்று சொன்னார். பின்பு,

"முன்னைக் கதையன்றி வேறுண்டோ? - அந்த
மோசச் சகுனி கெலித்தனன்"

என்கிறார் பாரதியார். சகுனி தான் திட்டமிட்டபடி ஒவ்வொன்றாக வென்றெடுக்கிறான். படிப்போர் நெஞ்சமும் பாரதியாரைப்போல பதற்றத்தாலும் விரக்தியாலும் நொந்து போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமரிடம் இருந்த எல்லாவற்றையும் (நாடு, நகர், செல்வம், உடன்பிறப்புகள் உட்பட) சூதாட்டத்தின் மூலம் அபகரித்துவிட்டது மட்டுமன்றி, பெருமையும் கீர்த்தியும் பொருந்திய சக்கரவர்த்தி தர்மரையும் எமக்கு உடமையாக்கிவிட்டோமோ? இத்துடன் சூதாட்டம் முவுற்றது. வெற்றி நமக்கே என்று குதூகலித்துத் துரியோதனன் ஆர்ப்பரித்து அங்குள்ள சபையோரை நோக்கி, "உலகையாளும் மன்னர்களே பாண்டவர்களின் பேரும் புகழும் இப்போது மங்கி மறைந்துவிட்டது. அவர்கள் கீர்த்தியுடன் ஆட்சி செய்த நாடெல்லாம் நமக்கே சொந்தம். அவர்களுடைய சீரிய பெருஞ்செல்வம் யாவும் எமக்கே சொந்தம். இனி அவர்களை வாழ்த்துவதை மறந்து எங்களையே வாழ்த்துங்கள்" என்ற கூறியதுடன் தம்பி துச்சாதனனை அழைத்து, "தம்பி! இந்தச் செய்தியை நாடெல்லாம் பறையடித்து உடனே அறிவிப்பாயாக" என்று கட்டளையிட்டான்.

ஊழிற் பெருவழி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

ஊழ்வினையை யாருமே வெல்ல முடியாது. அதை விளக்க எத்தனை உபாயம் செய்தாலும் அது நேரம் வரும் போது முன்னால் வந்து தன் வலிமையைக் காட்டும். அறநெறி யாவும் உணர்ந்த தர்மன் விதி வலியால் யாவற்றையும் இழந்து வெறுங்கையனாகி நிற்கிறான். தேவர்களையே நடுங்க வைக்கும் பராக்கிரமம் பொருந்திய இராவணன் இராமருடன் போரிட்டபோது யாவையும் இழந்து வெறுங்கையோடு தன் மாளிகைக்குத் திரும்புவதைப் பின் வரும் பாடலில் கம்பர் வர்ணிக்கிறார்.

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான்.

மாலையணிந்த பத்துத்தலைகளிலிருந்து முடிகளையும் சிவபெருமான் கொடுத்த வாளையும், வீரத்தையும் போர்க்களத்தில் இழந்து வெறுங்கையோடு இருப்பிடம் செல்கிறான் இராவணன். தெய்வத்தன்மை பொருந்திய இராமர், "இன்று போய் நாளை வா" என்று கூறி அனுப்புகிறார். ஆனால் அதர்மம் தலைவிரித்தாடும் துரியோதனன் சபையில் சூதாட்டத்தில் தர்மர் எல்லாவற்றையும் இழந்த போது துரியோதனன் மகிழ்ச்சியால் துள்ளுகிறான். இவனைவிடக் கொடியவனும் வஞ்சனையின் வடிவமுமான சகுனி சூதாட்டத்தில் மேலும் மனதில் குறிவைத்துக் கூறுகிறான்.

நல்லவன் போல நடித்து நயவஞ்சகமாகச் சூதாட்டத்தைத் தொடர வழி வகுக்கிறான். அதனால் துரியோதனனைப் பார்த்து, "வெந்த புண்ணில் வேலால் குத்துவது போல உன்னைப் போன்ற நல்லவர்கள் செய்வது பொருத்தமானதா? இந்த இளைஞர்களை உன் தந்தையார் கண்ணைப் போலப் போற்றுவதை அறிவாய். துரியோதனா! இவர்கள் யார்? உனது சகோதரர்கள் அல்லவா? இது சந்தோஷமாகப் பொழுதுபோக்கத் தொடங்கிய சூதாட்டமல்லவா? இவர்கள் வெட்கமடையத்தக்க வகையில் நீ நடத்துவது நல்லதா? அது நேர்மையான செயலா? சொல். அதனால் நாம் இன்னமும் பணயம் வைத்தாடுவோம். அவர்கள் தோற்றவை யாவையும் மீண்டும் வென்றெடுப்பதற்கு ஒரு வாய்ப்புக் (சந்தர்ப்பம்) கிடைக்கும் அல்லவா?" என்று மிக நல்லவன் போல நயந்து உரைக்கின்றான் கொடியவனிலும் கொடிய சகுனி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறுவதாகப் பாரதியார் கூறும்பாடல்,

இன்னும் பணயம்வைத் தாடுவோம்? - வெற்றி
இன்னும் இவர்பெற லாகுங்காண்,
பொன்னுங் குடிகளும் தேசமும் - பெற்றுப்
பொற்போடு போதற் கிடமுண்டாம் - ஒளி
மின்னும் அமுதமும் போன்றவள் - இவர்
மேவிடு தேவியை வைத்திட்டால் - (அவள்)
துன்னும் அதிட்ட முடையவள் - இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்.

தர்மர் தன்னையே இழந்த பின்பு அவருக்கு யாரையும் பணயமாக வைக்க உரிமையில்லை என்பது பகுத்தறிவுக்கு எட்டிய பொதுவிதி. ஆனால், அறநெறிக்குப் புறம்பாக நடாத்தும் அந்தச் சூதாட்டத்தில் நீதிநெறி எங்கே? விதிமுறை எங்கே?

இன்னுமொரு பணயம் வைக்கலாம் என்று சொன்னது மட்டுமன்றி, அது எது என்றும் சுட்டிக் காட்டுகிறான் சகுனி. இந்த ஐவரின் அதிட்டம் மிக்க மனதிற்கினிய மனையாளாகிய திரௌபதியை வைக்கலாம். அவளின் அதிட்டத்தினால் இவர்கள் நிச்சயமாக வென்று இழந்தவை யாவற்றையும் மீளப் பெற்றுச் சிறப்பாகத் தம் நாட்டுக்குத் திரும்பலாம் என்று பாண்டவர்க்கு நன்மை செய்ய வழிசொல்வது போலக் கூறி அவர்களைப் படுகுழியில் தள்ளத் திட்டம் தீட்டுகிறான் சகுனி. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா? இதனைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத துரியோதனன் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. அது மிக நன்று என்று மாமனைப் போற்றினான். அவன் தன் காதிற்குள் தேன் போல் இனித்த செய்தியைக் கேட்டதும் அவனது மனநிலையைப் பாரதியார் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

என்றந்த மாமன் உரைப்பவே - வளர்
இன்பம் மனத்தி னுடையனாய் - மிக
நன்றுநன் றென்று சுயோதனன் - சிறு
நாயொன்று தேன்கல சத்தினை - எண்ணித்
துன்று முவகையில் வெற்று நா - வினைத்
தோய்த்துச் சுவைத்து மகிழ்தல் போல் - அவன்
ஒன்றுரையாம லிருந்திட்டான் - அழி
வுற்ற துலகத்தற மெலாம்.

துரியோதனன், 'திரௌபதியும் தனக்குச் சொந்தமாகிவிட்டால்' என்ற நினைவில் ஏற்பட்ட ஆனந்தப் பரவசத்தில் பேச்சற்று அமைதியாகிவிட்டான். உலகத்தில் அறம் அழிந்துவிட்டது என்று பாடலின் முடிவில் தன் மனநிலையைக் கூறுகிறார் பாரதியார்.

கொடிய பாவியர் சபைதனிலே, (அங்கே அறிவுடைய மேலோர் இருந்த போதும் அவர்கள் மௌனமாகவே இருக்கின்றனர்) அதர்மம் மேலோங்கி நிற்கும் அந்தச் சபையிலே, பாஞ்சாலியைப் பணயமாகக் கேட்குமளவுக்கு நிலைமை போய்விட்டது. அண்ணன் தவறான வழியில் செல்கிறான் என்று அறிந்து மனம் கொதித்தெழுந்த போதும், அவரை மீறி நடக்கலாகாது என்ற கொள்கையிலிருந்து விலகாது, தம் நிதானத்தை இழக்காது அமைதியாகத் தம்பியர் பொறுமை காக்கின்றனர். தர்மர் சகுனி என்ற மந்திரவாதியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல அவன் கேட்கக் கேட்க, எல்லாவற்றையும் இழந்தது மட்டுமன்றித் தன்னையும் இழந்துவிட்ட நிலையில், தனக்கு எதையும் பணயம் வைக்கும் உரிமை இல்லை என்பதைக்கூட உணராது பாஞ்சாலியைப் பணயம் வைக்கத் தீர்மானிக்கிறார். அத்துடன் இவ்வளவும் வென்றெடுத்த சகுனி இதனை மட்டும் விட்டுவிடுவானா? நிச்சயமாக அவன் அதையும் வென்றெடுப்பான் என்பதை உணர விடாது ஊழ்வினை அவரை உந்தித் தள்ளுவதாக எண்ணத் தோன்றுகின்றது. பாரதியாரும் தர்மரின் செயலைப் பார்த்து வேதனையுடன் பாஞ்சாலத்தரசன் தவமிருந்து பெற்ற அரசனின் உயிருக்கு இனிய தவப்புதல்வியை, அமுதம் போன்றவளை, கைத்திறன் மிக்க ஓவியன் தீட்டிய பேரழகான சித்திரம் போன்றவளை, திருமகளை (மகாலட்சுமியை) ஒத்தவளை, தெய்விக அழகிய மலர்க்கொடி ஒன்று உலவுவதைப்போன்ற தோற்றம் கொண்டவளை, கிடைத்தற்கரிய பெரும் பேற்றைக் கொடியவனாகிய சகுனியின் மாயச் சூதுக்குப் பணயம் என தர்மன் சொல்லலாமோ என்கிறார்.

முற்காலத்தில் முனிவர்களும் அரசர்களும் உலக நன்மைக்காக வேள்வி செய்வார்கள். அதற்கு கடவுளை, தேவர்களை மகிழ்விப்பதற்காக தூய புனிதமான பொருள்களை வேள்வித் தீயில் இடுவார்கள். அப்படியான தெய்விகப் பொருளைப் போன்ற பாஞ்சாலியை இங்கு சூதாட்டத்தில் பணயம் வைத்ததைப் பார்த்துப் பாரதியார் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

வேள்விப் பொருள்களை நாய்க்குப் படைத்து உண்ண வைப்பது போல, அழகிய மாளிகையைக் கட்டிப் பேயை அங்கு குடிவைத்தது போல, ஆட்களை விற்றுப் பொன் வாங்கி ஒரு ஆந்தைக்கு அணிவித்தல் போல இந்தக் கொடுமையைத் தட்டிக் கேட்க ஒருவருமில்லை. அங்கே இல்லை என்பதால் தானே தர்மன் இப்படிப் பணயம் வைக்கிறான். இது எவ்வளவு கேவலமான செயல் என்று பழித்துக் கூறுகிறார்.

வேள்விப் பொருளினையே - புலை நாயின்முன்
மென்றிட வைப்பவர் போல்,
நீள்விட்டப் பொன் மாளிகை - கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே - செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல்போல்
வேள்விக் கொருவரில்லை - உயிர்த் தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கினான்
செருப்புக்குத் தோல் வேண்டியே - இங்கு கொல்வரோ
செல்வக் குழந்தையினை?

இது எப்படியான செயல் என்பதை மேலும் விமர்சித்து பல கேள்விக்கணை தொடுக்கிறார் பாரதியார். தங்கள் காலுக்குச் செருப்புத் தைப்பதற்குத் தம் செல்வக் குழந்தைகளை யாரும் கொல்வார்களா? சகுனியும் தர்மரும் விரும்பியாடும் சூதாட்டத்திற்குப் பணயம் மேய்த்துவப் பாஞ்சாலியோ? இப்படியும் யாராவது செய்வார்களா? இது ஏற்றுக்கொள்ளக் கூடியதா? இது ஒரு மிக அதர்மமான செயல் என்பதைப் பாரதியார் வன்மையாகக் கண்டிக்கிறார்.

தொடரும்....

---

**சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
**வறுமை தருவதொன் றில்** **934**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Manickavachagar

by Swami Sivananda

Continued from the 106th Kalasam....

In the meantime, Manickavachagar had reached the temple and was absorbed in meditation. He, too, felt the blow that the King gave the Lord. He got up from meditation. The King was in search of him. On the way he learnt that the old woman had been taken to the Lord's Abode in a celestial car. He came to the temple in Tiru Alavai and prostrated before Manickavachagar. He requested Manickavachagar to accept the rulership of the kingdom. The saint refused this offer but asked to be permitted to go to Perunturai. Both of them came to Madura and worshipped the Lord. Manickavachagar then left for Perunturai. The king also renounced everything soon after this and reached the Lord's Abode.

At Perunturai, Manickavachagar sang highly inspiring songs and prayed that he should see the Lord in the form of the Guru, as He appeared at first. The Lord fulfilled his wish. He asked him to go to Chidamparam. On the way he visited many shrines. In every shrine, unless the Lord appeared in the original form of the Guru, he would not be satisfied. At Tiru Uttarakosha Mangai, he wept bitterly when he did not see Him as the Guru. The Lord had to accede to his wish! By stages he reached Chidamparam and rolled on the holy ground. He stayed in a graden near the temple and sang the famous *Tiruvachagam.* The people of Tillai heard the songs and enjoyed its bliss.

In Ezha Nadu (Ceylon) there was an ascetic who was constantly repeating 'Long Live Ponnambalam'. The king of the place could not understand this, as he was a Buddhist, and had called the ascetic to him. The ascetic went to the palace and sat down in front of the king with the same words! Upon being asked by the king to explain the meaning, the ascetic said, "Oh! king, Ponnambalam is a sacred place in the Chola kingdom. This place is also called Chidambaram. Here the Formless God takes a form, of Nataraja, the divine dancer, for the welfare of the world. The object of His dance is to free the souls from the fetters of Maya. Inside the temple, there is a tank called Siva Jnana Ganga tank. In this tank Hiranyavarman, the son of Manu, took his bath and got his leprosy cured. Those who take a bath in this sacred tank and then worship Lord Nataraja are purified of all sins. For them there will be no more birth. They will attain Eternal Bliss.'

The Buddhist Guru who heard all this questioned: "Oh king, how can there be a God other than Lord Buddah? I will myself go to Chidambaram and defeat the Saivite in argument and convert the temple into a Buddhist shrine'. So saying he left for Tillai. The king also accompanied him, with his dumb daughter.

The Saivites sent a message to the Chola king asking him to arrange a debate with the Buddhists when the latter had arrived at Chidambaram. The day prior to the appointed day




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Brahmins prayed to Lord Nataraja for success in the debate. That night the Lord appeared in their dream and said: "Approach Vadavurar and request him to oppose the Buddhist Guru in argument" The next morning, the Brahmins approached Vadavurar who readily agreed. He went to the temple, worshipped the Lord, and entered the hall of the debate. He did not like to see the face of the Buddhist; so he sat behind a curtain. The Buddhist opened the debate. Manickavachagar explained the principles of Saivism. The Buddhist could not offer counter - arguments. They went on repeating their arguments! Manickavachagar prayed to the Lord for help. At His instance, Devi Sarasvathi withdrew Her grace from the Buddhist, and they became dumb. The Buddhist were defeated in argument.

The Buddhist king understood Manickavachagar's greatness. He said: "You have made my teacher and all his disciples dumb. If you can make my dumb daughter speak, I and my subjects will embrace Saivism". Manickavachagar asked him to bring his daughter. He prayed to the Lord for his help and then asked the girl to give proper answer to the questions put by the Buddhist Guru on Lord Siva. The dumb daughter not only began to speak but gave fitting answers to those questions. They were all wonder-struck at this miracle. The king and the Buddhist recognised the superiority of Saivism and embraced it. Manickavachagar restored speech to the Buddhists also.

One day Lord Siva desired to hear Tiruvachagam from the lips of Manickavachagar and bestow Moksha on him. He went to Manickavachagar in the disguise of a Brahmin. Manickavachagar welcomed the guest with respect and enquired of his needs. Lord Siva told Manickavachagar: "I want to hearTiruvachagam from your own holy lips. I shall write it down, so that I can learn it and with its help free myself from 'the shackles of Samsara'. Manickavachagar recited the "Tiruvachagam". The Bhramin (Lord Siva) wrote it down on palm leaves. Then he suddenly disappeared! At once Manickavachagar knew that the Bhramin was the Lord himself. He felt terrible anguish for not having recognised Him.

The Lord wanted to immortalise Manickavachagar and to spread his glory. So, He kept these songs on the step of Panchakshara of the Chit Sabha. The Brahmins of Tillai were surprised to see them lying there. They opened the leaves and read the contents. In the end it was written, 'Manickavachagar repeated this, Tiru Chitambalam wrote this'. The Brahmins wanted to know the meaning of these verses; so they showed this to Manickavachagar who took them to the temple, and, pointing out to the image of Lord Siva, said, "This Tillai Nataraja is the purport of these stanzas" He at once merged himself at the Feet of Lord Nataraja.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி - பதில்

- "அறிவோம் ஆன்மிகம்" நூலிலிருந்து.

**சிரார்த்தம் செய்யும் நாளில், மாலை நேரம் கோயிலுக்குச் செல்லலாமா?**

சிரார்த்தம் சிரத்தையுடன் நமது முன்னோர்களுக்கு அளிக்கும் மரியாதை. அன்று நம் உணர்வு அனைத்தும் சிரார்த்தம் யாரை நினைத்துச் செய்கிறோமோ அவரிடமே லயித்திருக்கும். சிரார்த்தம் செய்யும் நாளன்று யார் சிரார்த்தம் செய்தாரோ அவர் ஆலயத்திற்குச் செல்லக்கூடாது. வேதம் விதித்ததே விதி. சிலவற்றிற்கு காரணங்கள் வெளிப்படையாக விளக்கப்பட்டிருக்கும். சிலவற்றிற்கு நாம்தான் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அதை மாற்றிச் செய்யக்கூடாது.

சிரார்த்தம் செய்தவர் அடுத்த நாள் காலை தர்ப்பணம் செய்ய வேண்டும். அதுவரை தம்மை தூய்மையானவராக பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் பலருக்கு இவற்றை செயல்படுத்துவதற்கு சிரமம் என்பதால் அடுத்த நாள் செய்யவேண்டிய தர்ப்பணத்தை சிரார்த்தம் செய்த அன்றே செய்துவிடுகிறார்கள். எனினும் அடுத்தநாள் காலைவரை பித்ரு காலம் இருப்பதனால் சிரார்த்தம் செய்தவர்களுக்கு வீட்டை விட்டு வெளியே செல்லக்கூட அனுமதியில்லை. எனவே கண்டிப்பாக ஆலயம் செல்வதை தவிர்க்க வேண்டும்.

**பெண்கள் காயத்திரி மந்திரத்தைப் பாராயணம் செய்யலாமா?**

மந்திரங்கள் கடவுளால் நமது நன்மைக்காக அளிக்கப்பட்டவை. எப்படி மருந்துகள் நமது நன்மைக்காக என்று இருந்தாலும் தகுந்த மருத்துவரிடம் சென்று நமது உடலைப் பரிசோதனை செய்து நமக்கேற்ற மருந்துகளை நாம் உட்கொள்கிறோமோ அதுபோல மந்திரங்கள் அனைத்தும் பொதுவானவை அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீரியம் உடையவை. சம்பந்தப்பட்டவர் கடைப்பிடிக்கும் உணவு முறைகள் பழக்கவழக்கங்கள் எனப் பல விடயங்களின் அடிப்படையில் நமக்குக் கொடுக்கக்கூடிய மந்திரங்கள் அமையும்.

பெண்கள் வேத மந்திரங்கள் சொல்வதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். காயத்திரி மந்திரம் என்பது வேத மந்திரத்தின் சாரம். அதைக் கண்டிப்பாகச் சொல்லக்கூடாது. பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களிலும் முறையாக உபநயனம் செய்விக்கப்பட்டு உபதேசம் வாங்கிய பிறகே ஜபம் செய்ய வேண்டும். மந்திரங்கள் வெறும் எழுத்துக்கள் அல்ல. அவை மிகுந்த சக்தி உடையவை. அவற்றை நாம் பெற்றுக்கொண்டால் அதற்குரிய காலம், எண்ணங்கள், உணவு முறைகள் முதலியவற்றை அறிந்து சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லை என்றால் அந்த மந்திரங்கள் நமக்குத் தகுந்த பலனைத் தராதது மட்டுமல்லாமல் தவறான எதிர்மறையான பலன்களையும் கொடுக்கும். தற்காலத்தில் பெண்களே காயத்ரி மந்திரம் சொல்வதுபோல் கேஸட்டில் பதிவு செய்து பல வீடுகளிலும் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். காயத்ரி மந்திரம் வெளியே சொல்லப்படக் கூடாதது. ரகஸ்யமாக பாதுகாக்கப்பட வேண்டியதாகும். எனினும் சில பெண்கள் தாங்கள் பலகாலமாக சொல்லிக் கொண்டுதானே வருகிறோம் நன்றாகத்தானே இருக்கிறோம் என்று சொல்வதும் உண்டு.

அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது மந்திரங்கள் சுற்றுப்புறச் சூழலில் மட்டுமல்லாமல் நமது உடலிலும் அதிர்வுகளை ஏற்படுத்தும் தன்மை உடையவை. வேதம் சொன்னதை நாம் எந்த வகையிலும் மீறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUBY'S

CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு







**திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா**







**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org